பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 29-10-39 பிரமாதி௵ ஐப்பசிமீ 13உ	முத்து 5

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உலக வர்த்தமானம்		154
நமது ஸங்கீதம்	ஏ. என். கலியாணசுந்தரம்	156
உலகத்திற்கு ஹிந்துக்கள் அளித்த செல்வம்	S. R. ரங்கநாதன்	161
அலைகள்	காங்கேயன்	166
டாக்டர் நேத்ரா	ஸ்ரீமதி கமலா பத்மநாபன்	170
மளிகைக்கடை மாணிக்கம் செட்டி	ஜி. பாலசுப்ரமண்யம்	173
புத்தக விமர்சனம்		175
சினிமாச் சுருள்		176

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

உலக வர்த்தமானம்

அயல் நாடுகளில்:

ஐரோப்பாவில் யுத்தம் பலமாகத்தான் நடந்துவருகிறது. ஜெர்மனியின் ஆகாய விமானப்படைகள் ஸ்காட்லாந்தின் கடற் கரையைத் தாக்கின. பிரிட்டிஷ் விமானங்கள் எதிரிகளை எதிர்த்துச் சண்டையிட்டு மிகுந்த சேதத்தை விளைவித்தன. எதிரிகளின் படைகள் பர்த் ஆப் போர்த்து என்னுமிடத்திலுள்ள கப்பல்களைத் தாக்கினவாம். ஆனால் கப்பல்களெல்லாம் அதிகச் சேதமடையவில்லையாம்.

பிரஞ்சுக் கப்பற்படை 25,000 டன் ஜெர்மன் சரக்குகளைக் கைப்பற்றிக்கொண்டது.

மேல் எல்லையில் ஜெர்மன் துருப்புகள் வந்து குவிகின்றன. ஹிட்லர் மாகினட் அரணைத் துளைப்பதற்கு ஜெர்மனியின் முழு பலத்தையும் பிரயோகிப்பாரெனத் தெரிகிறது. மாகினட் அரணில் பிரிட்டிஷ் துருப்புகளும் குவிந்திருக்கின்றன. எச்சமயத்திலும் அவர்கள் யுத்தத்திற்குத் தயார்.

பால்டிக் நாடுகளிலுள்ள ஜெர்மானியர்களைத் தாய்நாட்டிற்கு உதவிசெய்ய ஹிட்லர் அழைத்திருக்கிறார். அதன்படியே ஒவ்வொரு தேசங்களிலிருந்தும் ஜெர்மானியர் வெளியேறுகின்றனர்.

போலந்தில் சில இடங்களில் இன்னும் போலிஷ்வீரர்கள் ஜெர்மனியையும் ரஷ்யாவையும் எதிர்த்துச் சண்டையிட்டு வருகின்றனரென்று தகவல் கிடைத்திருக்கிறது.

பின்லாந்தின் சுதந்திரத்தை ரஷ்யா அங்கீகரித்தது. இருநாடுகளின் சிநேக பாவமும் ஒற்றுமையும் இதனால் பலப்பட்டதென்று ரஷ்யத் தலைவர் காலினின் கூறுகிறார்;

ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் நடந்த சமாதான உடன்படிக்கைப் பேச்சுகள் நின்றுவிட்டன. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் எதிரிடையாகச் சில ஒப்பந்தங்களை ரஷ்யா கூறியதின்மேல் ஒப்பந்தம் நின்றுவிட்டதெனக் கூறப்படுகிறது.

பிரான்ஸ் யுத்தத்தில் ஓர் புதிய யுக்தியைக் கையாண்டு வருகிறது. மேற்கெல்லையில் பிடித்த இடங்களையெல்லாம் விட்டுக் கொடுத்துவருகின்றது.

நேச நாடுகளுடன் துருக்கி சமாதானஞ் செய்துகொண்டது. சமாதானத்தின் முக்கிய கோரிக்கைகள் பின்வருவன :—முதலாவதாக, துருக்கியை எந்த நாடாவது ஆக்கிரமிக்குமானால் நேசநாடுகள் அதற்கு உதவிசெய்யவேண்டும். இரண்டாவதாக மத்தியதரைக்கடலில் யுத்தம் நடக்குமானால் மூன்று நாடுகளும் ஒத்துழைக்கவேண்டும். மூன்றாவதாக, கிரீஸையும் ருமேனியாவையும் எந்த நாடாவது தாக்குமானால் அவ்விரு நாடுகளுக்கும் உதவிசெய்யவேண்டும். நான்காவதாக, ரஷ்யாவுடன் அனுவசியமாகச் சண்டைக்குச் செல்லக்கூடாது. இன்னும் மற்றும்பல. இவ்வொப்பந்தம் பதினைந்து வருஷங்களுக்குச் செல்லுபடியாகும்.

ஜெர்மனிக்கு யுத்தத்தில் உதவிசெய்யப்போவதில்லையென்று ரஷ்யா கூறிவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

நம் நாட்டில்:

இவ்வார நடப்பு சமீபத்தில் வெளியிட்ட ராஜப் பிரதிநிதியின் பிரகடனத்தால் அலங்கரிக்கப்பட்டு நிற்கிறது. யுத்தம் முடிந்த பிறகுதான் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் இந்தியா வேண்டியதைக் கொடுக்கும் என்றும், அப்பொழுதும் பல கக்ஷிகளையும் சிற்றரசர்களையும் கலந்தாலோசனை செய்து கொண்டுதான் காரியத்தை நடத்துமென்றும் ராஜப்பிரதிநிதி கூறினார். பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்தத்தில் இந்தியாவைப்பற்றி என்ன கருத்து வைத்துக்கொண்டிருக்கிறதெனக் கேட்டதற்குப் பதிலாக ராஜப்பிரதிநிதி அரசாங்கம் 1935-ல் விடுத்த கோரிக்கை

யையே அனுசரிக்குமென்றும் 1919-ல் கொடுத்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுமென்றும் கூறினர். சிறுபான்மைக் கக்ஷிகளின் நோக்கத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் நிராகரிக்காதெனவும் கூறுகிறார்.

ராஜப் பிரதிநிதியின் மேற்சொன்ன பிரகடனம் அநேகருக்கு மனக்கசப்பை உண்டாக்கிவிட்டது இப்பிரகடனம் மிகவும் வருந்தத்தக்க விஷயமெனச் சென்னை பிரதம மந்திரி கூறினர்.

"இன்று காங்கிரஸ் மந்திரி சபை வேலையிலிருக்கும்; நாளை அதிலிருந்து விலகிக்கொள்ளும். ஆனால் காங்கிரஸ் போட்ட நிர்மாணத் திட்டத்தைவிடாது நடத்திக் கொண்டு வருமென்பதில் சந்தேகமில்லை" என்று வார்தாக்கல்வியைப்பற்றிப் பேசும்பொழுது காந்திஜி கூறியிருக்கிறார்.

சிறுபான்மைக் கக்ஷியின் பெயரைச் சொல்லிக்கொண்டு இந்தியாவுக்கு உரியதை மறுப்பது அழகல்லவெனக் காந்திஜி கூறுகிறார். உணவு கேட்டதற்குப் பதிலாக உருக்காங் கல்லைக் கொடுத்திருக்கிறதெனவும் காங்கிரஸ் தன்னுடைய இயக்கத்தை ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டதென்றும், காந்திஜி ராஜப்பிரதிநிதியின் பிரகடனத்தை வாசித்துக் கூறினர்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் கூடிற்று. காந்திஜீயும் மற்ற தலைவர்களும் விஜயஞ் செயதிருந்தனர். ராஜப்பிரதிநிதியின் பிரகடனத்தைக் கொண்டு காங்கிரஸ் மந்திரிசபை வேலையை நடத்த முடியாதெனக்கூறி. மந்திரிகளை ராஜீனுமாச் செய்யக் காரியக் கமிட்டி உத்தரவிட்டது. அடுத்த ஞாயிறுக்குள் எல்லா மந்திரிகளும் ராஜீனுமாச் செய்வார்கள்.

தக்க சமயம் வாய்த்ததென முஸ்லிம் லீக்கும் மற்ற உதிரிக் கக்ஷிகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சிரசின் மேல் தாங்கி நடத்தப்போவதாகத் தெரிகிறது!

ஹிட்லரின் இரகசிய ஆயுதம்:

பிரான்ஸேவின் சேனை வைத்தியப் பகுதியின் டைரக்டர் ஜெனரல், ஜெர்மனியின் இரகசிய ஆயுத பயமுறுத்தலைப் பற்றிக் கூறுகிறார்.

ஹிட்லர் எதிரிகளை விஷக் கிருமிகளினுல் தாக்கப்போவதாகவும், அதைத்தான் இரகசிய ஆயுதமெனக் கூறுகிறாரென்றும் சொல்லுகிறார். எதிரிகளின் துருப்புகளை விஷக் கிருமிகளினுல் தாக்கப்படுவதற்கு வழிகள் இருந்தாலும் அம்மை குத்தப்பட்ட துருப்புகளின் மீது அது பயன்பெருது. துருப்புகளைக் கிருமிகளினுல் முழுவதும் தாக்கப்படுவது அசாத்தியம். ஆகாய விமானத்தினுல் வியாதிகளைப் பரவச் செய்வது முடியாத காரியம். ஓர் இடத்தில் விஷக் கிருமிகளைப் பரவச் செய்யவேண்டுமானுல், ஆகாய விமானம் முந்நூறு அடிகளுக்குங் கீழே பறந்து செல்லவேண்டும். அவ்விதம் பறந்தால் விமானத்திற்கு எதிரிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கியினுல் அபாயம் வருமென்பதில் சந்தேகமில்லை. வெகு உயரத்திலிருந்து கிருமிகளை இலேசாகப் பரவச் செய்தால் அதனுல் பயன் ஒன்றும் ஏற்படாது. அவைகள் இலேசாகப் பரவிக் காற்றுடன் சென்றுவிடும்.

டைபாய்டு, காலரா முதலிய தொத்து வியாதிகளை அநேக மாறுதல்களைக் கொண்டு தடுத்துவிடுகிறார்கள். கிருமிகள் எங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டனவோ அவ்விடத்திற்கே திரும்பிச் செல்லவும் கூடும். ஆதலால் இது ஏட்டுச் சுரைக்காயே எனக் கூறுகிறார்.

நமது ஸங்கீதம்

(ஏ. என். கல்யாணஸுந்தரம் எம். ஏ.)

ஸங்கீதத்தின் உபயோகம் என்ன ?— ஸங்கீதத்தைத் தொழிலாகக்கொண்டவர்களின் முக்கிய நோக்கம் என்ன? கேட்பவர்களின் மனதை ரஸிக்கச் செய்து கவலைகளை மறக்கடித்து, ஆறுதலையும் ஸந்தோஷத்தையும் கொடுப்பதே. இவைகளைச் செய்யாத ஸங்கீதம், ஸங்கீதமே அல்ல. ஸங்கீத வித்வான்களும், வித்வான்களல்லர். வித்வான்கள் ஜனங்களின் மனோரஞ்சனத்தையே முக்கிய நோக்கமாகக்கொண்டு பாடவேண்டும். பொது ஜனத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றைன்பது பேர்கள் ஸங்கீதத்தைக் கேட்டு மனம் மகிழவே ஸங்கீதக் கச்சேரிகளுக்குப் போகிறார்கள். ஒருவர் மாத்திரம் பாடகர் சரியாக, சாஸ்திர ரீதியாசப் பாடுகிறாரா, ஆரோஹண அவரோஹண க்ரமம் சரியாக இருக்கின்றனவா, பைரவி ராகத்தில், ஆனந்த பைரவி, கரகரப்ரியா முதலிய ராகங்களைக் கலக்காமல் பாடுகிறாரா, நாட்டையில் ஷட்ச்ருதி ரிஷபம் சரியாகப் பேசுகிறதா என்கிற விஷயங்களையே கவனித்து வித்வானிடம் குறை கண்டுபிடிப்பதையே நோக்கமாகக் கொண்டுபோகிறார். வித்வான் ரொம்ப சுகமாக ஹிந்தோளம் பாடிக்கொண்டிருப்பார். சதுச்ருதி தைவதத்தைக் கலந்து வித்வான் ஒரு ப்ருகாவை வீசுவார். உடனே இந்த ஸங்கீத சாஸ்திரிக்குத் தூக்கிப்போடும். "கொலை—கொலை" என்று முணுமுணுப்பார். பக்கத்தில் உள்ளவர் யாராவது திரும்பிப்பார்த்தால் பிடித்தது அவருக்கு சனியன். ஸங்கீத சாஸ்திரியார் அவரிடம் வித்வான் செய்யும் ஸ்வரக் கொலையை விஸ்தரிக்க ஆரம்பித்துவிடுவார். அத்துடன் வேறொரு வித்வான் சுத்ததைவதத்துடன் ஹிந்தோளம்பாடிய மஹிமையைபற்றிப் பேச ஆரம்பித்து, அங்கு ஸங்கீதம் கேட்பவர்களுக்கு இடையூறு செய்வதையே தொழிலாகக் கொண்டுவிடுவார். இந்த மாதிரியான ஸங்கீத சாஸ்திரிகளைக் கவனிக்காமல், பொது ஜனங்களின் மனதைக் கவருவதற்காக, சாஸ்திரத்திற்கு விரோதமாக விருந்தாலும் பரவாயில்லை என்று பாடுவதையே பாடகர்கள் முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

ஹிந்துஸ்தானி ஸங்கீதத்திற்கும் சாஸ்திரம் இல்லாமல் போகவில்லை. ஆரோஹண அவரோஹண க்ரமங்களும் அவர்களிடம் உண்டு. நம்மைவிட ஒரு படி மேல் சென்று, ராகங்களை ஆண், பெண் என்று வித்யாஸத்துடன் பிரித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சாஸ்திரம் ஸங்கீத அப்பியாசம் முடிவு பெறும்வரை தான் உபயோகிக்கப்படுகிறது. கச்சேரி செய்ய ஆரம்பித்தவுடன் சாஸ்திரத்தைக் கட்டித் தூர வைத்துவிடுகிறார்கள். ஆரோஹண அவரோஹணங்களில் இல்லாத அநேக ஸ்வரங்கள் அவர்களது ராக ப்ரஸ்தாரங்களில் அடிபடுகின்றன. ஆனால் அந்த அன்ய ஸ்வரங்கள் அனைத்தும் ராக ரஞ்சகமாகவும், மனோரஞ்சகமாகவும், இருக்கின்றன. அவைகளால் ராகங்கள் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. இந்த முறையையே நம் வித்வான்களும் அனுசரித்தால், பொதுஜனங்களை ஆனந்திக்கச் செய்து நல்ல கீர்த்தியடைவார்கள் என்பது எனது திடமான அபிப்பிராயம். இம்முறையைத் தற்கால ஸங்கீத வித்வான்களில் சிலர் அனுசரித்து வருகிறார்கள். அதனால் அவர்கள் பொது ஜனங்களின் நல்ல அபிப்பிராயத்தை அடைந்திருப்பதையும் நான் கவனித்திருக்கிறேன். அவர்கள் பெயர்களைக் கூறுவது அவ்வளவு உசிதமல்லவாதலால் நான் அவர்களது பெயர்களை எழுதாது விடுகிறேன்.

நமது ஸங்கீத வித்வான்களுக்கு ஸ்வர ஞானமும், தாளக்கட்டும் அதிகம். ஆனால்

ஸ்வரங்களை அகாரமாகப் பாடுவதில் வட இந்தியர்களுக்கு இருக்கும் சக்தி கிடையாது. வட இந்தியர்கள் ஸ்வரங்களை அகாரமாகவே அப்யசிப்பதால், அவர்களின் த்ருதகால ப்ருகாக்களிலும் ஸ்வரங்களனைத்தும் அகாரங்களாகத் தெளிவாய்த் தெரிகின்றன. ஆனால் தற்காலத்தில் அவர்களில் சிலர் நம் வித்வான்களைப் பார்த்து சில சமயங்களில் அகாரங்களை ஸ்வரங்களாகப் பாட ஆரம்பிக்கிறார்கள். அந்த ஸ்வரங்களனைத்தும் 'ஏக ஸ்ருதி' ஸ்வரங்களாகவே இருக்கின்றன. நம் வித்வான்கள் அவர்களின் நல்ல குணமான அகார ஸாதகத்தைக் 'காப்பி' அடித்துக் கொண்டு ஸ்வரம் பாடுவதைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

நமது வித்வான்கள் அடிக்கடி ஸ்வரம் பாட ஆரம்பித்து த்ருத காலத்தில் தாளக்கட்டைக் காண்பிப்பதற்காகத் தாள வித்வான்களுடன் யுத்தத்திற்கு ஆரம்பித்து, ஸ்ருதி பிசகி, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க 'ஏக ஸ்ருதி'யில் எல்லா ஸ்வரங்களையும் அள்ளி வீசிவிடுகிறார்கள். இந்த யுத்தத்தில் ஸங்கீத சாஸ்திரி தவிர, பொது ஜனங்களில் வேறெவரும் கலந்துகொள்வதில்லை. இதை "இன்டர்வலாக" மதித்து, பேசவோ, வெளியே போய் வரவோ உபயோகித்துக்கொள்கிறார்கள். வித்வான்கள் தாளக்கட்டிலுள்ள தங்கள் திறமையைக் காட்டவேண்டியதுதான். ஆனால் அதை அடிக்கடி காட்டாமல் ஒன்றிரண்டு இடங்களில் காட்டி நிறுத்தினால், பொது ஜனங்களுக்கு அதிருப்தி உண்டாகாது.

ஸங்கீத வித்வான்களில் அநேகர் ஸாஹித்யமே தெரியாமல் பதங்களைக் கண்ட இடங்களில் தப்பும் தவறுமாய் வெட்டி, ஸங்கதி போடுவதாக எண்ணிப் பாடுகிறார்கள். இது முற்றிலும் தவறு. இந்தக் குறை நம்மிடம் மாத்திரம் இல்லை. வட இந்தியர்களிடமும் இருக்கிறது. ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தைப் பற்றி விமர்சனம்எழுதும் நம் விமர்சகர்களுக்கு பாஷை தெரியாததால் அதைப்பற்றி ஒன்றுமே எழுதுவதில்லை. ஆனால் அவர்களை 'இந்திரன், சந்திரன்' என்று புகழ்ந்துவிட்டு, 'வழவழ' என்று எழுதிவிடுகிறார்கள். வேண்டுமானால் காலஞ்சென்ற அப்துல் கரீம்கான் பாடிய 'பியா பினு' என்ற பாட்டின் ரிகார்டை வாங்கிக் கேட்டால் தெரியும். டாக்கிப் பாட்டுகளையோ கேட்கவே வேண்டியதில்லை. நியூ தியேட்டரின் 'ப்ரேம் கஹானி' என்ற பாட்டு 'ப்ரேம்கா ஹானி' என்று பாடப்படுகிறது. 'காதல் கதை' என்பது 'காதல் நாசம்' என்ற அர்த்தம் உண்டாகும்படி பாடப்படுகிறது. இது போலவே நம் ஸங்கீத வித்வான்களும் அவர்களைவிட அதிகமாகவே கொலை செய்கிறார்கள். அதுவும் தெலுங்குப் பாட்டுகள் அவர்களிடம் மாட்டிக் கொண்டு விழிக்கின்றன. 'நின்னு செப்ப காரணமேமி' என்பது 'நின்னு செப்பகா ரணமேமி' என்றும், 'அகமேக மாருத சீகரா' என்பது 'அகமேகமா ருதசீகரா' என்றும் 'ததி நவநீத க்ஷீர முலு ஸாகமா' என்பது 'ததிநவநீதக்ஷி ராமுலு ஸாகமா' என்றும், 'விராஜித குருகுஹாய அஜ்ஞான த்வம்ஸ ஸவித்ரே' என்பது, 'விராஜித குருகுஹாய ஞான த்வம்ஸ ஸவித்ரே' என்றும் பாடப்படுகின்றன. இம்மாதிரியாக அநேக உதாரணங்கள் காட்டலாம். இவை போதுமென்று நிறுத்துகிறேன்.

இம்மாதிரி பதங்களை வெட்டி, நேர் மாறான அர்த்தங்கள் வராமல் பாட வேண்டியது அவசியம். தீர்க்காக்ஷரங்களில்தான் ஸங்கதிகள் போடவேண்டும் ஹ்ரஸ்வ அக்ஷரங்களில் சங்கதிகள் போடக்கூடாது, என்ற முறையைப் பாடகர்கள் மறக்கக்கூடாது. இதை மறந்தால் ஸங்கீதத்தின் அழகும் மறைந்துவிடும். அழகிய உருவத்திற்குக் கிழிந்த ஆடையும், வளைந்து ஒடிந்த ஆபரணங்களையும் போட்டு விகாரப் படுத்துவதைவிட, ஆடையாபரணங்கள் போடாமலிருப்பதே மேல். இயற்கை அழகாவது தனியாகப் பிரகாசிக்கும்.

ஸங்கீதத்திற்கு ஜாதி, மதபேதமும் கிடையாது. வகுப்பு பேதமும் கிடையாது. யாவரும் ஸமமே. ஆனால் தற்காலத்தில் சில சங்கீத சாஸ்திரிகள்

'தியாகராஜர் ஸ்கூல்' 'தீக்ஷிதர் ஸ்கூல்,' 'வேங்கடமஹி ஸ்கூல்' என்று ஒரு வகுப்பு வாதத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற இம்மூவரும் தாங்கள் இயற்றிய பாட்டுகளினுலோ, சாஸ்திரத்தினுலோ இம்மாதிரி விபரீதம் வருமென்று கனவிலுங்கூடக் கருதியிருக்கமாட்டார்கள். இந்த ஸங்கீத சாஸ்திரிகள் வீணுக இந்தப் பழியை அவர்கள் மீது ஏற்றி ஓர் அனுவசியமான விவாதம் உண்டாக்கியிருக்கிறார்கள். இது போதாதென்று சில விமர்சனக்காரர்கள் தமிழ், தெலுங்கு, ஹிந்துஸ்தானி என்ற பாஷா பேதத்தையும், வாதத்தையும் ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் அநேகமாய் முன்னேற்றச் சீர்திருத்தக்காரர்கள். தற்கால மாறுதல்களை அனுஸரித்துப் பொதுஜன இஷ்டம்போல் ஸமூக பழக்க வழக்கங்களையும், சட்டதிட்டங்களையும் மாற்றி அமைக்க வேண்டுமென்ற கொள்கை உள்ளவர்கள். ஆனல் இந்தக் கொள்கையை ஸங்கீத விஷயத்தில் மாத்திரம் அடியுடன் மறந்து கைவிட்டு விட்டார்கள்.

காலத்திற்குத் தகுந்தபடி ஸமூகத்தில் மாறுதல்களை ஆதரித்தால், ஸமூகத்தை அண்டியிருக்கும் ஸங்கீதத்தில் மாத்திரம் காலத்திற்கேற்ப, பொதுஜன இஷ்டப்படி மாறுதல்கள் செய்வதை அவர்கள் ஏன் ஆதரிக்காமல், அதைத் தடை செய்கிறார்கள்? இதில் மாத்திரம் விரிவான நோக்கம் அவர்களுக்கு ஏன் இல்லை? அதற்குப் பதிலாகப் பாடும் பாட்டுகளில் பாதியாவது தமிழ்ப் பாட்டுகளாய் இருக்கவேண்டும், என்று கதற ஆரம்பித்திருக்கிறார்கள். இது போதாதென்று ஹிந்துஸ்தானி பாட்டுகளை வெளுத்துக் கட்டுகிறார்கள். "பாகவதராய் இருந்துங்கூட ஹிந்துஸ்தான் வர்ண மெட்டுகளில் ஏன் பாடுகிறார்?" என்று எழுதித் தள்ளிவிடுகிறார்கள். ஏன் பாடுகிறார் என்ற கேள்வியுடன் நிறுத்திவிடுகிறார்கள். அதன் பதிலைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. முயற்சி செய்திருந்தால் ஏன் பாடுகிறார் என்பது விளங்கியிருக்கும். ஜனங்கள் பிரியப்பட்டு கேட்க வருவதால்தான் பாடினர். இல்லாவிட்டால் பாடியிருக்கமாட்டார்.

நான்கைந்து வருஷங்களுக்கு முன் சென்னையிலுள்ள ஸங்கீத ஸபைகளில் நடக்கும் ஸங்கீதக் கச்சேரிகளுக்குத் தினம் சுமார் 600 அல்லது 700 ரூபாய் வரை வசூலாகும். இப்பொழுதோ 200 அல்லது 300 ரூபாய்கூட வசூலாகிறதில்லை. விமர்சனக்காரர்கள் இஷ்டப்படி சுத்தத் தமிழ்ப் பாட்டுகள் அதிகமாய்ப் பாடிய பின்னர் இக்கதி ஏற்பட்டிருக்கிறது. முன்வந்த கூட்டம் இப்பொழுது ஸங்கீத ஸபைகளைவிட்டு எங்கு சென்று விட்டது? அந்தக் கூட்டத்தை இப்பொழுது டாக்கி கொட்டகைகளில் ஹிந்துஸ்தான் வர்ணமெட்டுகளில் பாடும் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருப்பதைக் காணலாம். ஏன் இந்தக் கூட்டம் அங்கு சென்றது? ஹிந்துஸ்தான் வழிகளில் பாடப்படும் பாட்டுகளைக் கேட்கவே. கச்சேரி நடக்கும்பொழுது ஸங்கீத ஸபை காரியதரிசிகளின் முகத்தைக் கவனித்தால் நான் எழுதியதின் உண்மை விளங்கும்.

இதனல் ஹிந்துஸ்தான் வழி கலந்த ஸங்கீதம் பொதுஜனங்களுக்கு இன்பம் தருவதாகத் தெரிகிறது. அப்பொழுது ஏன் பாடகர்கள் ஹிந்துஸ்தான் வழியைக் கலந்து பாடக்கூடாது? நமது 'கானடாவில்' 'ஹிந்துஸ்தான்' தர்பாரி கானடா' சஞ்சாரங்களைக் கலந்தால் கேட்பதற்கு இனிமையாகவே இருக்கிறது. அதுபோலவே 'கமாஸுடன்' 'ஹிந்துஸ்தான் கமாஸின்' கலப்பு ஒரு உத்ஸாஹத்தைக் கொடுக்கிறது. இதனல் ஒரு தப்பும் இல்லை. காம்போஜியில் காதலி நிஷாதத்தை பாஷாங்கமென்று சொல்லி, அனுமதிக்கும் ஸங்கீத சாஸ்திரிகளும் இந்த மாதிரி ஹிந்துஸ்தான் கலப்புகளையும் பாஷாங்கமெனக்கூறி தங்கள் மனதை ஸமாதானப்படுத்திக்கொள்ளலாம். காம்போஜியில் காதலி நிஷாதத்தை யாராவது ஒரு வித்வான் காதிற்கினிமையாக இருக்கிறதென்று முதன் முதலாக உபயோகித்திருக்க வேண்டும். பிறகு அது பாஷாங்கமென்று அனு

(165-ம் பக்கம் பார்க்க)

உலகத்திற்கு ஹிந்துக்கள் அளித்த செல்வம் *

S. R. ரங்கநாதன்,

(சென்னை சர்வகலாசாலை நூல் நிலயாளர்)

உலக முன்னேற்றத்திற்கு இந்து நாகரிகம் எவ்வளவு தூரம் உதவி புரிந்திருக்கிறது என்பதை நாம் சிறிது கவனிக்க வேண்டும். ஏனென்றால் தற்கால உலக வளர்ச்சி எல்லா தேசத்து நாகரிகங்களும் ஒன்று சேர்ந்து ஒரு கதம்பமாக இருக்கிறது.

ஞான வாழ்க்கை.

"சிந்தனையினாலேயே மனிதன் சிருஷ்டிக்கப்படுகிறான். எதைப் பற்றி நீ நினைக்கிறாயோ, அதுவாகவே நீ ஆகிறாய். ஆகையால் பரப்பிரம்மத்தை நினை" என்கிறது உபநிஷத். இதே சட்டம் தேசங்களுக்கும் அதிலுள்ள ஜனங்களுக்கும் பொருந்துகிறது. பரப்பிரம்மத்தையே எப்பொழுதும் ஸ்மரிக்கும் பல மகான்கள் இருந்ததினால், ஹிந்துஸ்தானத்தில் வேதாந்தத்தையே அடிப்படையாகக் கொண்ட நிகரற்ற நாகரிகம் புஷ்பித்திருக்கிறது. ஞானத்திலும், சம்பூர்ண தர்மத்திலும் அது வெகு தூரம் முன்னேறி, நேர்மையான யோகத்திற்கு உலகத்திற்கே வழிகாட்டியாய் நிற்கிறது.

கீதை

ஹிந்துமத தத்துவத்தையே திரட்டி எடுத்த நவநீதம்போலக் காணப்படும் சின்னஞ்சிறு ஒப்பற்ற கீதை எல்லா சமயங்களிலும், எல்லா நாட்டிலும் மனிதனுக்குப் புத்துயிர் அளித்து வருகிறது. முகலாய சக்ரவர்த்தி அக்பர், ஜர்மன் கவி கேத்தே முதலிய பழைய மகான்களிலிருந்து, தற்கால அமெரிக்கா தேசத்து எமர்ஸன் வரையில் எல்லோரையும் கீதை வசீகரித்து நிற்கிறது. இன்னும் சம்பூர்ணயோகமென்கிற புதுயோகத்தைக் கற்பித்துவரும் ஸ்ரீ அரவிந்தரும் கீதையையே தன் சிருஷ்டிக்கு அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறார். என்றுமழியா இக்கீதையை மானிடருக்கு அளித்த பெருமை நம் முன்னோர்களுடையதே.

கலையும், கலைஞானமும்.

சென்ற நூற்றாண்டில் ஹிந்துக்களைப் பற்றி ஒரு அபூர்வ அபிப்ராயத்தைச் சிலர் சிருஷ்டித்தார்கள்.

ஹிந்து மதம் செயலற்றது என்றும் ஏதோ கனவுலகத்தைச் சேர்ந்தது என்றும், அது மனித சமூகத்தின் வளர்ச்சியையும், சுறுசுறுப்பையும் உறிஞ்சி விடுகிறது என்றும் அவர்கள் கதைகட்டினார்கள். ஆனால் பதினெட்டாவது நூற்றாண்டு வரையில் கலையிலும், கலை ஞானத்திலும், சமூக வாழ்விலும், விஞ்ஞானத்திலும், ஹிந்துக்கள் ஆண்மையுடன் கண்டோர் வியக்கும்படி முன்னேறிச் சென்றதை அறிந்தவர்கள் இக்கதைக்கு ஒரு நாளும் இடங்கொடார். காலக்கொடுமையால் அன்னிய ஆட்சியின் கீழ் அகப்பட்டு ஹிந்துக்கள் சிதைவுண்டு போனது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

உலக நாகரிகத்தில் ஒரு ஸ்திரமான கௌரவ ஸ்தானத்தை அடைவதற்கு நமது ராமாயணம் ஒன்று போதாதா? ராமாயணமும், மகாபாரதமும், சாகுந்தலமும், ஹிந்துவைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்யும் மாணிக்கங்கள் அன்றோ? விஸ்தாரமாக விஷயங்களுக்குள் ஊடுருவிச் செல்லும் பாணினியின் கிரந்தம் எல்லா

* இதைத் தமிழ்ப் படுத்தினவர் எனக்குத் தம்பி முறையாகிற "சாகரன்" என்னும் P. S. ஜகந்நாதன்.

இலக்கண நூல்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது.

சமூக வாழ்வு

சமூக நன்மைக்காகத் தங்கள் சுய நன்மையையும் விட்டுக்கொடுப்பது ஹிந்துக்களின் தர்மம். இவ்விஷயத்தில் ஐரோப்பிய தர்மம் முரணாக இருக்கிறது. ஏனென்றால் சில வருஷங்களாக ரஷ்யா, இத்தாலி ஜெர்மனி தேசங்களில் ஒருவிதக் கொடுமையான "சமூக ஆட்சி" பரவி வந்தாலும், சாதாரணமாய்ப் பிரதிமனுஷ்யனின் சுகத்தை நாட்டுவதே ஐரோப்பிய நாகரிகத்தின் முக்கிய கோரிக்கையாக இருக்கிறது. இத் தர்ம மாறுபாட்டை அறிந்தால் ஹிந்துக்களிடையே உள்ள சில சம்பிரதாயங்களின் நோக்கம் தெளிவாக விளங்கும். அவி பக்த குடும்ப வாழ்வு, குறிப்பிட்ட சில காரணங்களிருந்தாலன்றி ஒரு மனைவிக்கு மேல் மணக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு, விதவா புனர்விவாகம் இல்லாமலிருப்பது, போன்ற சம்பிரதாயங்கள் மேற்சொன்ன ஐரோப்பிய தர்மத்திற்கு விரோதமான ஹிந்து தர்மத்தினால் ஏற்பட்டவை.

இந்தப் பிரத்தியேகமான சமூக தர்மத்தினால் விளைந்த ஏற்பாடுகளில் முக்கியமானது மற்றொன்று இருக்கிறது. அது பல வழிகளில் சிதைந்துபோய் இருப்பதால் தற்காலத்தில் அதன் பெயரைச் சொல்வதே மன வருத்தத்தை விளைவிக்கிறது. ஆகையால் அதனுடைய பழைய பெயராகிய 'வர்ணாசிரமம்' என்பதை உபயோகப் படுத்தாமல் அதனுடைய அபாயங்களை நீக்கி, முக்கிய சாராம்சத்தை மாத்திரம் ஞாபகப்படுத்துவதற்கு, "வேலைப்பிரிவினை" என்ற மறு பெயரால் குறிப்பதே நலம். ஆரிய குலத்தில் அவரவர்கள் பிறவிக் குணத்திற்குத் தகுந்தாற்போல் வேலைகள் கொடுத்து, அவ்வேலையையும், அவ்வேலையைச் செய்யும் மனிதனையும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து நான்கு ஜாதிகளாக்கினார்கள். மானிடனின் பிறவிக்குணம் சாதாரணமாய்த் தாய் தகப்பன் வழியை ஒட்டிவந்தாலும், ஜன்மாந்திர வாசனையால் மாறுபடுவதும் உண்டு என்பதை வர்ணாசிரமத்தை ஏற்படுத்தியவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். இதற்கு ஆதாரம், கீதையிலும், மகாபாரதத்திலுள்ள தர்மவ்யாத சரித்திரம், ராமாயணத்திலுள்ள விசுவாமித்திரர் சரித்திரம் போன்ற உபாக்யானங்களிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன. வேதமும், பிறப்பு ஜாதி ஒன்றாக இருந்தாலும், அனுஷ்டான ஜாதி மற்றொன்றாக இருப்பதற்கு இடம் கொடுக்கிறது என்றே சொல்லலாம். அபூர்வமாக, அசாதாரணமாக உள்ள சிலர் தன் பிறப்பு ஜாதியை மாற்றிக்கொள்ளும் சலுகையைச் சரியான முறையில் அனுஷ்டிக்காததால்தான் ஹிந்து சமூகத்தில் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் வர்ணாசிரமத்தின் அடிப்படையான நோக்கத்தில் யாதொரு தப்பிதமும் இல்லை. இந்த ஏற்பாட்டின்படி வாலிபர்களை நாட்டின் எதிர்கால வேலைகளுக்கும் சமூக வாழ்க்கைக்கும் தகுதி உள்ளவர்களாகப் பழக்கினார்கள். இப்பழக்கமே இப்பொழுது மேல்நாட்டில் "வேலைப் பயிற்சி" என்ற பெயரில் பரவிவருகிறது.

அரசாட்சி முறை

தற்பொழுது ஹிந்துக்களின் அரசாங்க முறையே அநேகமாக மறைந்துவிட்டது. நமது ராஜீய வாழ்வில், "அன்னிய அரசாங்கம்" என்ற அலை புகுந்து நமது பழைய ராஜாங்க முறையை அடித்துக்கொண்டு போய்விட்டது. இருந்தபோதிலும் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட "சுக்ரநீதி" "அர்த்த சாஸ்திரம்," போன்ற புராதன புத்தகங்களைப் படித்தால் இந்துக்கள் அரசாங்க முறையிலும், நாணய சாஸ்திரத்திலும், அக்காலத்தில் மற்ற எந்த நாட்டிற்கும் தாழ்ந்துவிடவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

விஞ்ஞானம்

ஹிந்துக்களின் முன்னேற்றத்தின் நடுவே, விஞ்ஞான வளர்ச்சிக்குப் பதினாறுவது அல்லது பதினேழாவது நூற்றாண்டின் மத்தியில் ஒரு பெருந்தடை ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது பட்டுப்

போனது இன்னும் துளிர்க்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஜகதீச சந்திரபோஸ், பிரபுல்ல சந்திர ரே, ராமானுஜம், ராமன் முதலியவர்கள் வழியாக சிறிது விழிப்பு ஏற்பட்டுவந்தாலும் உலக விஞ்ஞான வளர்ச்சியில் ஹிந்துக்களுக்கு ஏற்பட்ட பெருமை அஸ்திவாரம் போட்டதுதான் என்று சொல்லவேண்டும். இருந்தாலும் அஸ்திவாரம் போடுவது சாமான்யமல்ல!

பௌதிக சாஸ்திரம்

கணித சாஸ்திரத்தின் அஸ்திவாரம் ஹிந்துக்கள் கற்பித்த சாதாரண எண்களும், எதிர்மறைஎண்களும், முக்கோண சாஸ்திரமும், 'குவாட்டிரியாடிக் ஈக்வேஷன்', "இன்டிடர்மினேட் ஈக்வேஷன்" (quadratic equation and Indeterminate equation) முதலியவை. இந்துக்களுக்கு சங்கீதத்தில் இருந்த ஆர்வம், அவர்களை சப்த சாஸ்திரத்திற்கு அஸ்திவாரம் போடும்படி செய்தது. அதன் மேல் கட்டப்பட்ட சுருதி சாஸ்திரமும், சுர சாஸ்திரமும், இன்றைக்கும் தலை தூக்கி நிற்கின்றன.

ரசாயன விக்ஞானம்

வராகமிஹிரர் கெட்டியான சிமிட்டி செய்யும் முறையை எழுதியிருக்கிறார். நமதுபுராதனக் கோவில்களில் காணப்படும் இச்சிமிட்டிகள் தற்கால சிமிட்டியின் அழுத்தத்திற்கு ஒரு விதத்திலும் தாழ்ந்துபோனதாகத் தெரியவில்லை. ஹிந்துக்கள் சாயம் போடுவதற்காகக் கண்டுபிடித்த வழிகள் இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன. பிரசித்திபெற்ற தற்கால விக்ஞானியாகிய ராஸ்கோ இச்சாயம் போடும் முறையை வெகுவாகப் புகழ்கிறார். டமாஸ்கஸின் பிரசித்தி பெற்ற பட்டாக்கத்திக்கு வந்த பெருமைக்குக் காரணம், ஹிந்துக்கள் கற்பித்த உளி காய்ச்சித் துவட்டும் முறையே. டில்லி குடப்மினரில் மகமத் கஜினி நிறுத்திய ஆறு டன் நிறையுள்ள இரும்புத்தூண் இன்றும் துருவில்லாமல் விளங்கி வருகிறது. அது சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் கருடஸ்தம்பமாக ஹிந்துக்களால் செய்யப்பட்டது. இவ்வளவு ஏராளமான இரும்பைத் தூணாகச்செய்யும் வித்தை இப்பொழுது அழிந்துபோனாலும் அக்காலத்தில் அவர்கள் சாதித்தது ஒரு அபாரமான செயலல்லவா? லோகங்களை வார்ப்பதில் ஹிந்துக்களிடம் இன்னும் என்னென்ன அதிசயமான சித்திகள் இருந்தனவோ? யார் அறிவார்கள்?

வான சாஸ்திரம்

ஹிந்துக்களின் வான சாஸ்திரத் தேர்ச்சி எல்லோரும் அறிந்ததுதான். ருக் வேதத்திலேயே சூரிய வீதியைப்பற்றியும், அதனுடைய பன்னிரண்டு பாகங்களைப்பற்றியும் சரியான குறிப்பு இருக்கிறது. சந்திர வீதியைப்பற்றியும், நக்ஷத்திர மண்டலத்தைப் பற்றியும் வேதம் வெகு தெளிவாகச் சொல்லுகிறது. இப்பாகுபாடு மற்ற எல்லா தேசங்களிலும் அனுஷ்டிக்கப்பட்ட விஷயம் கவனிக்கத்தக்கது. பிற்காலத்திலும் ஹிந்துக்கள் இவைகளில் தங்கள் மனதை மிகவும் ஈடுபடுத்தி இருக்கிறார்கள். முந்நூறு வருஷத்திற்கு முன்னால் வான சாஸ்திரத்தைச் செய்கையில் கொண்டுவந்து தன்னுடைய ஆராய்ச்சி நிலையத்தில் பல புதிய கருவிகளை உண்டாக்கிய ஜயசிங் என்பவரை ஐரோப்பிய மன்னர்களும் புகழ்ந்தார்கள். அவர்கள் இந்தியர்களின் ஆராய்ச்சி நிலையங்களைப் பார்வையிட்டு அறியும்படி தங்கள் நாட்டு விஞ்ஞானிகளையும் அனுப்பினார்கள்.

கி. மு. 500 ஆண்டிலேயே ஆர்யபட்டர் என்பவர் தினம் சூரியன் உதிப்பதும், ஆகாய மார்க்கமாய்ச் சென்று அஸ்தமிப்பதும் வெறும் தோற்றமே, பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதாலேயே நமக்கு இந்தப் பிரமை உண்டாகிறது என்று ஊகித்துப் பிரசாரம் செய்தார். இக்கற்பனை நம் ஹிந்துக்களின் கௌரவத்தை வெகு தூரம் தூக்கி விட்டது.

ஜீவ சாஸ்திரம்

ஜீவ சாஸ்திரத்தில் புராதன ஹிந்துக்கள் கண்டு பிடித்தவைகளை நாம் இன்றும்

நேருக்கு நேராக கிராமாந்தரங்களில் காணலாம். இவைகளைப்பற்றி வராக மிஹிரரும், சாரங்கதாரும் எழுதிய புத்தகங்கள் தற்பொழுது அச்சில் வந்திருக்கின்றன.

தற்காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஸர் ஜகதீச சந்திரபோஸ் கண்டு பிடிப்பதற்கு வெகு நூற்றுண்டுகள் முன்னதாகவே உதயணன் என்பவர் தாவரங்களுக்கு உயிரும், இறப்பும், தூக்கமும், வியாதியும், அதற்கு மருந்தினல் சிகிச்சையும், மனிதர்களுக்கு இருப்பது போலவே உண்டென்று எழுதி இருக்கிருர்.

நவயுகம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே ஹிந்துஸ்தானத்தில் பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சி மிக விருத்தியடைந்திருந்தது. ஹிந்துக்களுக்கு விவசாயமே உயிர் நிலையாக இருந்ததால் அவர்கள் பயிர்களின் பாதுகாப்பிற்காகப் புழு பூச்சிகளைப் பற்றிய அறிவில் போதுமான அளவு தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்கள் பல விதமான பூச்சிகளைப் பிடித்து, அவைகளுடைய செய்கைகளையும், அவைகளால் உண்டாகும் நன்மை தீமைகளையும் ஆராய்ந்தார்கள்.

விவசாயம்

ஆதிகாலத்தில் ஹிந்துக்கள் விவசாயத்திலும், தோட்ட வேலையிலும் எவ்வளவு தூரம் கவனம் செலுத்தினர்கள் என்பதை அக்னி புராணம் என்ற புத்தகம் வெகு அழகாக எடுத்துச் சொல்லுகிறது. "பூமி, எரு, பயிர்களின் வளர்ச்சி முதலியவைகளைப்பற்றி விஸ்தாரமாக அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் தற்காலத்திற்கும் உபயோகப்படக்கூடியவைகளாக இருக்கின்றன. வராகமிஹிரர் சொல்லும் சில மூலிகைகளைக் கவனித்தால் தாவர வர்க்கத்திலேயே பல அதிசயங்களை உண்டாக்கலாம் என்று தோன்றுகிறது. தற்காலத்தவர்கள், அம் மூலிகைகளை ஒரு முறைகூட உபயோகித்துப் பார்க்காமல் அவைகளைத் தள்ளிவிடுவது விஞ்ஞான முறைக்கு ஏற்றதன்று. அரசாங்க விவசாயக் கழகத்தார் முயற்சி எடுத்துக்கொண்டு, இம் மூலிகைகளை உபயோகித்து, அதனுல் ஏற்படும் பலாபலன்களை எடுத்துச் சொன்னுல் அது பெரிய தொண்டாக இருக்கும்.

மிருக சாஸ்திரம்

தற்பொழுது அரசாங்க மிருக சாஸ்திர நிபுணர்கள் பழையகாலத்து மிருக சாஸ்திரத்தில் குறிப்பிட்ட மருந்துகளை ஆராய முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது மிகவும் பாராட்டக்கூடியதே. அவர்கள் இப்படிப் பழையகாலத்து நூல்களை ஆராய்ந்து அவற்றை அச்சடித்துப் பிரசுரம் செய்வதோடுகூட, அம்மருந்துகளை நேரிலேயே உபயோகித்துப் பார்த்தால் நம் தேசத்திற்கு அது புகழையும், கௌரவத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மருந்து வகைகள்

ஆதிகாலத்து ஹிந்துக்கள் வைத்திய சாஸ்திரத்தை ஆராய்ந்து கண்டுபிடித்த மருந்துகளைப்பற்றி, தற்கால ஜனங்கள் கொண்டிருந்த சந்தேகமும், அலக்ஷியமும், இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றன. இந்திய வைத்திய சாஸ்திரத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ள பரிபாஷைகளின் சூக்ஷ்மத்தை அறியாமல் சென்ற நூற்றுண்டில் செய்யப்பட்ட சில மொழி பெயர்ப்புக்களால் ஆயுர்வேத சித்த சாஸ்திரத்தைப்பற்றி அநாவசியமான குழப்பமும், தப்பபிப்ராயமும் ஏற்பட்டது, அம்முறைகளைக் கையாளும் வைத்தியர்களோடு பழகினவர்கள் இப் பரிபாஷைகளை இப்படிக் 'கோளாறு' செய்யமாட்டார்கள். பரிபாஷையைச் சரியாக அறிந்தால், சரகத்திலும் சுஸ்ருதத்திலும் வெளிப்பட்டிருக்கும் வைத்திய சாஸ்திர ஞானம் அபாரமானதென்பதும், இன்றைக்கும் அவைகளில் சொல்லியவை எல்லாவற்றையும் நிராகரிக்க முடியாது என்பதும் தெளிவாக விளங்கும். தேக அமைப்பு சாஸ்திரத்தைப்பற்றியும், நோய்களைப் பற்றியும், சிகிச்சை முறையைப்பற்றியும் அப்புத்தகங்களில் சொல்லி இருப்பவை

தற்பொழுதும் உபயோகிக்கும்படி இருக்கின்றன.

எட்டாம் நூற்றுண்டின் கடைசியில் இவ்விரு புத்தகங்களும் அரபி பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. கி. பி. 982-ல் இறந்த அல்ராஸி என்ற அரபி தேசத்து வைத்தியர் இப் புத்தகங்களை வைத்திய சாஸ்திரத்தின் ஆதாரம் என்று சொல்லுகிறுர். அரபி பாஷையிலிருந்து லத்தினில் மொழி பெயர்த்தவர்கள், ஹிந்துக்கள் வைத்தியத்திற்குச் செய்த கொடையை மிகவும் புகழ்ந்து பேசுகிறுர்கள். தற்காலத்து ஐரோப்பிய வைத்தியர்களும் இந்திய வைத்திய முறையை அறிந்து வருகிறுர்கள். மூக்கைப்பற்றிய ஒருவித ரண சிகிச்சையை இந்தியர்களிட மிருந்துதான் அவர்கள் கற்றுர்கள்.

அந்நிய நாடுகளில் இந்திய மனப்பான்மை

ஹிந்துக்கள் உலகத்திற்குத் தங்கள் மனப்பான்மையை அளித்த விஷயம் மிகவும் முக்கியமானது. இந்த நாகரிகம் இந்தியாவின் எல்லைக்குள்ளாகவே அடங்கி இருக்கவில்லை. ஆனுல் அவை எல்லா திக்குகளிலும் எல்லா நாடுகளிலும் பரவிற்று. இந்தியாவின் வடக்கே திபேத் சைனு, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு ஏராளமான விஷயங்கள் புத்தகரூபமாகப் போயிருக்கின்றன. இந்தப் பரவுதல் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பாகவே நிகழ்ந்தது. துருக்கிஸ்தானத்திலும், திபேத், சைனு, ஜப்பான்நாட்டிலுமுள்ள புத்தகாலயங்களில் நம்மிடையே கூட அகப்படாத பல இந்தியப் புத்தகங்கள் இருக்கின்றன.

தென் கிழக்கு ஆசியாவை சரித்திராசிரியர்கள் இந்தியாவின் விரிவு என்றே பெயரிட்டிருக்கிறுர்கள். இதிலிருந்து இந்திய நாகரிகம் அவ்விடம் எவ்வளவு தூரம் பரவி இருக்கிறது என்பதை நன்ருகத் தெரிகிறது.

ஆயிரம் வருஷங்களுக்கு முன்பாக அந்தக் காலத்து நாகரிக உலகில் வழிகாட்டிச் சென்ற பாரசீகர்களும், அராபியர்களும், இந்து நாகரிகத்தினின்றும் மிகச் சிறந்த விஷயங்களைத் தங்களுடைய நாகரிகத்துடன் சேர்த்துக்கொண்டார்கள். ஐரோப்பிய நாகரிகத்தில் இச்சேர்க்கை முக்கிய ஸ்தானம் வகிக்கிறது.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பாகவே, 'பிலாஸ்டிரேடஸ்' எழுதிய 'அப்பலோனியனின்' ஜீவிய சரித்திரம், முதலிய புத்தகங்களைப் படித்தால், கிரேக்கர்களும், ஈஜிப்டு தேசத்தவர்களும் எவ்வளவு தூரம் ஹிந்து நாகரிகத்தைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டிருக்கிறுர்கள் என்பது தெரிகிறது.

இந்தியர்கள் உலகத்திற்களித்த செல்வத்தை விரிவாய்ச் சொல்வதென்ருல் இந்த இதழ் முழுவதுமே போதாது என்று அஞ்சுகிறேன்.

(160-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே இப்பொழுது ஆபேரியில் பாடப்படும் 'நகுமோமு' என்ற கீர்த்தனம் சதுச்ருதி தைவதத்துடன் பாடப்படுகிறது. சுத்த தைவதத்திற்குப் பதிலாக இவ்விதம் சதுச்ருதி தைவதத்துடன் மதுரை புஷ்பவனம் தான் முதன் முதலாகப் பாடியதாகச் சொல்லிக்கொள்கிருர்கள். அது இப்பொழுது ஸம்ப்ரதாயத்தில் அனுபவத்திற்கு வந்துவிட்டது. ஏனென்ருல், கேட்பதற்கு நன்ருக இருக்கிறது. அதுபோலவே சங்கராபரணத்தில் பலவர்ணங்களில் சிலவற்றில் கைசிகி நிஷாதம் கலக்கப்பட்டுப் பாடப்படுகிறது. கேட்பதற்கு நன்ருக இருக்கிறது. ஆனுல் அதை பாஷாங்கமென—காம்போஜிபோல்—அனுமதிக்க ஸங்கீத சாஸ்திரிகளுக்கு ஏன் தைரியம் வரவில்லை ?

(தொடரும்)

அலைகள்

'காங்கேயன்'

அல்லிக் குளத்தருகே ஷண்முகநாதன் நின்று மறையும் சூரியனைப் பார்த்தான். அப்போது ஆகாயத்தில் தோன்றிய வர்ண ஜாலங்களைப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஷண்முகநாதன் உழைப்பாளி. சிந்திக்கவும் நேரமில்லை. ஆனாலும் முன்தினம் நடந்த சம்பவங்கள் அவன் மனதில் வேரூன்றி யிருந்தன. அவை மறுபடியும் மறுபடியும் மனக்கண் முன் வந்து நின்று புத்துணர்ச்சியைக் கொடுத்தன.

ஆஹா, அவைதாம் எப்படிப்பட்ட சம்பவங்கள்! அவ்விதம் நிகழுமென்று யாராவது எதிர்பார்த் திருப்பார்களா? இதை நினைக்கும்போதுதான் ஷண்முகத்துக்கு ஆச்சரியம் பொங்கி வந்தது. ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் கலைந்து ஒன்றுசேரும் விசித்திரத்தை அப்போது அவன் பார்த்தான். "ஏ, கடவுளே! எவ்வளவு அற்புதமான பொருள்களைச் சிருஷ்டித்து விட்டாய் நீ! இந்த மேகம் மாதிரியே மனிதன் மனதையும் படைத்திருக்கிறாயே! இந்தக் குரங்கு மனம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுகிறது. அதைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் நிறுத்த முடியவில்லையே!" என்று நொந்துகொண்டான்.

* * *

ஷண்முகநாதனும் முத்தழகும் சிறு வயதிலிருந்து ஒன்றாக வளர்ந்த நண்பர்கள். முத்தழகு கொஞ்சம் வயதில் பெரியவன். ஆனால் ஷண்முகம்தான் பார்ப்பதற்குப் பெரியவனாக இருப்பான். ஷண்முகநாதனுக்கு நன்றாகப் பள்ளிக்கூடத்தில் படித்து பட்டணத்திற்குப் போய் உத்தியோகம் பார்க்கவேண்டுமென்பது ஆசை. ஆனால் முத்தழகுக்கு அதுமாதிரி பெரிய ஆசையெல்லாம் கிடையாது. ஏன், படிக்கவேண்டுமென்று ஆசைகூட அவனுக்கு இல்லை.

முத்தழகுக்கு அரிச்சுவடி வகுப்பில் மூன்று வருஷங்கள் அனுபவம் ஏற்பட்ட தன் பலனாக பள்ளிக்கூடப் படிப்பில் அவனுக்கு மோசமான அபிப்பிராயம் உண்டாயிற்று. இதனால் பள்ளிக்கூடப் படிப்புக்கு ஒரேயடியாகத் தலைமுழுகி விட்டுத் தோளில் கலப்பையுடன் வயலுக்குச்செல்ல ஆரம்பித்தான். வயலில்தான் அவனுக்குப் பிழைப்பு உண்டு என்பது அவனுக்குத் தெரியும்.

தன் நண்பனைப் பார்க்கும்போது ஷண்முகத்துக்கு அளவுகடந்த ஆச்சரியம் உண்டாகும். "இவன்தான் படிக்காதவனாயிற்றே! இவ்வளவு கெட்டிக்காரத் தனமும் பொறுமையும் எங்கிருந்து வந்தது?" என்று அவன் ஆச்சரியப்படுவான். இவை புஸ்தகத்திலிருந்து நமக்கு வராது; அனுபவத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதுதான் போலிருக்கிறது என்று நினைத்தான் ஷண்முகம். ஐந்தாவது வகுப்பில் தேறியதும் அவனும் வயலுக்குப்போக ஆரம்பித்தான்.

* * *

இவர்கள் பணக்காரர்கள் வயிற்றில் பிறந்தவர்களல்லர். தங்களுக்குள்ள நிலத்தைத் தேகபலத்தைக் கொண்டு பாடுபட்டு உழைத்துக் காலந்தள்ளி வந்தார்கள். அடிக்கடி அவர்கள் வறுமையின் கொடுமையை உணர்வது உண்டு.

"உன்னிடம் 2 ரூபாய் இருக்கிறதா?" என்று கேட்பான் முத்தழகு.

"ஏன்?" என்று ஷண்முகம் கேட்பான். அவன் கொடுக்கத்தான் போகிறானாக்கும் என்று முத்து எண்ணிக்கொண்டு "இல்லை! இரண்டு வேஷ்டிகள் வாங்க வேண்டும்" என்பான்.

"உனக்குத்தான் மூன்று வேஷ்டி இருக்கிறதே. இன்னும் இரண்டு மாதம் கழித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இங்கே பார்! நான் இரண்டே துண்டு களை வைத்துக்கொண்டு ஆறு மாதமாய்க் காலந் தள்ளுகிறேன்" என்று ஷண்முகத் திடமிருந்து பதில் பிறக்கும். அப்போது ஷண்முகத்தின் முகத்தில் தோன்றிய உணர்ச்சியின் வேகத்தைத் தாளாமல் முத்து தலை குனிவான்.

காலசக்கரம் வேகமாகச் சுழலவே, முத்துவும் ஷண்முகமும் வறுமையால் கஷ்டப்படத் தொடங்கினர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து அனுபவித்த கஷ்டம் இன்னும் இருவரையும் ஒற்றுமைப் படுத்திற்று. "ஏ, முத்தழகு! நமக்கு எவ்வளவு கஷ்டம் வருகிறது பார்! நீயாவது நானுவது பணக்காரனுக இருக்கக் கூடாதா? இரண்டுபேரும் இப்படி ஏழையாகிக் கஷ்டப் படுகிருேமே! என்னடா செய்வோம்?" என்று கதறினன் ஷண்முகம் ஒரு நாள். முத்தழகு ஒரு கணம் மௌனமாய் இருந்துவிட்டு "ஷண்முகம்! நம்மில் யாராவது ஒருவர் பணக்காரனுகி விட்டால்—ஏன், நீதான் பணக்காரனுகி விடுகிருய் என்று வைத்துக் கொள்ளேன்! அப்போது நீ என்னேடு பேசக்கூட மாட்டாய்!" என்று கேலி செய்தான். "அப்படியா என்னை நினைத்துக்கொண்டாய்?" என்று ஷண்முகம் கோபித்துக் கொள்ளவே, "இல்லை தம்பி! அது மனுஷ சுபாவம்!" என்று முத்தழகு வேதாந்தமாகப் பதில் சொன்னன்.

"முத்தழகு! நான் பணக்காரனுகி விட்டால் உன்னை மறந்து விடுவேனு?...... ஏன்? நாம் இரண்டு பேருந்தான் பணக்காரர்களாக இருப்போமே. அப்பொழுது இரண்டுபேரும் இப்போது போலவே சிநேகமாக இருப்போமல்லவா?" என்றுன் ஷண்முகம்.

"தம்பி! என்னமோ வெல்லாம் மனக் கோட்டை கட்டுகிருயே? நாமாவது? பணக்காரர்களாகவாவது?" என்று சொல்லிச் சிரித்தான் முத்து.

* * *

ஒரு நாள் ஷண்முகம் பட்டணம் சந்தைக்கு மாடு மாற்றுவதற்காகப் போனன். மாட்டுத் தரகன் குழந்தைவேலுவுக்கு ஷண்முகத்தை நன்ருகத் தெரியும்; நல்ல மாடாக அவனுக்கு மாற்றிக் கொடுப்பது வழக்கம். இந்தத் தடவை சந்தைக்குப் போனபோது அவன் ஷண்முகத்துக்கு ஓர் முக்கியமான விஷயம் சொன்னன்.

"ஷண்முகம்! நீதான் ரொம்பக் கஷ்டப்படுகிருயே! ஒரு சீட்டுப்போடேன்! உனக்கு அதிர்ஷ்டமிருந்தால் 100 ரூபாய் கிடைக்கும்." என்ருன் குழந்தைவேலு.

"என்ன அண்ணே! எனக்கா ரூபாய் கிடைக்கப்போகிறது? என் அதிர்ஷ்டம் தான் தெரிஞ்சு கிடக்கிறதே!"

"சும்மா போட்டுப்பாரேன்! இரண்டு அணு போனல் போகிறது. அதிர்ஷ்டம் இருந்தால் 100 ரூபாய் வருமல்லவா?

"அப்படியானல் போனல் போகிறது." என்று எண்ணி ஒரு சீட்டுப் போட்டு வைத்தான்.

திரும்பி அவன் ஊருக்கு வந்தபோது, தான் சீட்டுப்போட்ட விஷயத்தை முத்தழகுக்குச் சொல்லவேண்டுமென்று அவன் மனம் தூண்டியது. ஆனல் அதைச் சொன்னல் முத்து விழுந்து விழுந்து சிரிப்பான். "பணப் பைத்தியம் முற்றிப் போய்விட்டது! அட மனுஷா!" என்று கையாண்டி செய்வான். சொல்லவே கூடாது" என்று ஷண்முகம் எண்ணி 'கம்' மென்று இருந்துவிட்டான்.

ஆனல் அடுத்தமாதம் பத்தாந்தேதி சீட்டு விழுந்ததும் பணத்தை முத்துவிடம் எடுத்துக்கொண்டுபோய் "இதோபார்! நூறு ரூபாய் எனக்கு பிரைஸ் விழுந்திருக்கிறது என்ன சொல்கிருய்?" என்று கேட்டால் முத்தழகு ஒரு கணம் பிரமித்துப் போவான். அப்படித்தான் முத்துவைக் கலங்க அடிக்கவேண்டும். இப்படி கூடிய சீக்கிரத்தில் தான் அடையப் போகும் வெற்றியை எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

அடடா! கடவுளருளால் நூறு ரூபாய் கிடைக்குமானல் என்னவெல்லாம் செய்ய ஷண்முகநாதன் நினைத்தான் தெரியுமா? அந்த நூறு ரூபாயில் ஐம்பது ரூபாய் முத்தழகுக்குக் கொடுத்துவிட வேண்டும். அப்போது முத்தழகுக்கு எவ்வளவு

சந்தோஷம் உண்டாகும்? பாக்கி ஐம்பது ரூபாயில் எவ்வளவு சாமான்கள் வாங்கலாம்—ஆனால் உண்மையிலே ஷண்முகநாதனுக்குப் பரிசு கிடைக்கப்போகிறதா?

* * *

நாம் எதிர்பாராத விஷயங்கள் திடீரென்று நடந்துவிடுகின்றன. அப்பொழுதுதான் கடவுளின் கைத்திறனைப் பார்க்கிறோம். இல்லாவிட்டால் மனிதனின் அறிவினால் அமைந்த திட்டங்கள் எல்லாம் ஏன் தவிடு பொடியாகின்றன?

ஷண்முகத்தின் வாழ்வில் எதிர்பாராதது நடந்து விட்டது. அவனுக்குப் பிரைஸ் விழுந்துவிட்டது... நூறு ரூபாய்கள்!

இந்த சந்தோஷச் செய்தியை ஷண்முகம் பட்டணம் வந்ததும் தெரிந்துகொண்டான். அவனுக்கு உண்டான உற்சாகத்தைக் கேட்பானேன்? அவனுக்குத் தலைகால் புரியவில்லை. "நிஜமாகவா? குழந்தைவேலு! நிஜமாகவே எனக்குச் சீட்டு விழுந்துவிட்டதா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான். குழந்தைவேலு ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கையில் வைத்த பிறகுதான் அவனுக்கு நிச்சயம் உண்டாயிற்று.

ஒன்றும் புரியாமல் பிரமித்தபடி ஷண்முகம் ரயிலேறினான். இந்த நூறு ரூபாயையும் முத்தழகுவிடம் கொடுத்துவிட வேண்டும். தானடைந்த சந்தோஷத்தை விட அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகும்? ஷண்முகம் பணப்பையை உணர்ச்சியுடன் பார்த்தான். சேர்ந்தாற்போல் நூறு ரூபாயை அவன் இதற்கு முன் பார்த்தது கிடையாது. கண்டறியாத ஒரு பொக்கிஷத்தைப் பார்த்ததும் அவன் மனதில் ஒரு புரட்சி உண்டாயிற்று.

"இந்த நூறு ரூபாயையும் நானே எடுத்துக்கொண்டால்?"...என்ற ஒரு ஆசை பளீரென்று தோன்றிற்று. அதே சமயத்தில் பளீரென்று ஒரு நீல மின்னல் தோன்றி மறைந்தது. இந்த ஆசை தோன்றியதும். ஷண்முகம் 'திரு' 'திரு' வென்று விழித்தான். தான் உட்கார்ந்திருந்த வண்டியை நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். அவன் எண்ணத்தை மற்றப் பிரயாணிகள் அறிந்து கொண்டார்களோ என்னவோ? அப்போது அவனுடன் நான்கு பேர்கள்தான் இருந்தார்கள். ஒருவர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். மற்றவர்கள் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஷண்முகத்தின் கெட்ட எண்ணம் எப்படித் தெரியப் போகிறது?

"இந்த ரூபாய்களை நானே எடுத்துக் கொள்ளலாம். இந்த சமாசாரம் முத்தழகுக்கு ஒருநாளும் தெரியப்போகிறதில்லை" என்று எண்ணினான் ஷண்முகம். "முத்தழகுவை நீ ஏமாற்றப் பார்க்கிறாய்" என்று மனதில் ஏதோ உறுத்திற்று.

"நானா ஏமாற்றப் பார்க்கிறேன். இல்லவே இல்லை. எனக்குக் கிடைத்த ரூபாயை நான் வைத்துக் கொள்வதில் என்ன தவறு?"

"ஷண்முகம்! நீ பணம் வந்தால் முத்துவுக்கு அதில்பாதி கொடுப்பதாகச் சொல்லவில்லையா?"

"பணம்! சரியாய்ப் போச்சு! ஒரு ரூபாய் சம்பாதிக்க நான் அன்று எவ்வளவு கஷ்டப்பட்டேன்? முழுசாக 50 ரூபாயை ...ஹூம்! எந்த முட்டாள்பயல் அப்படிக் கொடுப்பான்?"

"நீ சொன்னசொல்லைக் காப்பாற்றாமல் உன் அந்தராத்மாவுக்குத் துரோகம் செய்கிறாய்."

இவ்விதமாக அவன் மனதில் போராட்டம் எழுந்தது. அதன் முடிவில் ஷண்முகநாதன் ஓர் தீர்மானத்துக்கு வந்தான். போகும் வழியில் அத்தை வீட்டில் இறங்கவேண்டியது. அங்கே பணத்தைக் கொடுத்துவிட்டு ஊருக்குப் போகவேண்டியது. பணம் கிடைத்த சுவடுகூட ஒருவருக்கும் தெரியக்கூடாது!

ஷண்முகநாதன் பணப்பையைப் பத்திரமாக சிறிய பைக்குள் போட்டு அந்த சாக்கை அதிபத்திரமாகத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு படுத்தான். ஆனால் அவனுக்கு எப்படித் தூக்கம் வரும் இவ்வளவு குழப்பம் ஏற்பட்டபிறகு?

முத்தழகுவின் பரிதாபமான முகம் அவன் மனக்கண்முன் வந்து நின்று பிச்சை கேட்பது போன்ற ஒரு கொடிய தோற்றம் தோன்றிற்று. அதைப் பார்த்து ஷண்முகம் தோளைக் குலுக்கிக்கொண்டான்.

"நீ தான் பணக்காரனாகப் போய்விடுகிறாய் என்று வைத்துக்கொள்ளேன், அப்பொழுது என்னோடு நீ பேசக்கூட மாட்டாய்" என்று அன்று முத்தழகு சொன்னது திடீரென்று ஞாபகத்துக்கு வந்தது. ஷண்முகம் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். முத்தழகு அன்று செய்த தீர்க்க தரிசனம் இப்பொழுது எவ்வளவு உண்மையாகிவிட்டது? இந்த நூறு ரூபாயைக் கண்டதுமே ஷண்முகத்தின் மனம் மாறிவிட்டதே!

"இந்தப் பணப்பேய் ஒரு நிமிஷத்தில் என்னை மயக்கிவிட்டது பார். இவ்வளவு நாள் பழகிய சிநேகிதனுக்குக்கூட துரோகம் செய்யச்செய்தது எவ்வளவு ஆச்சரியம்? எங்கே அந்தப்பணம்! நாசமாய்ப் போகிற பணம்! அந்த நோட்டுக்களைச் சுக்கு நூறாய்க் கிழித்தெறிந்துவிடுகிறேன். அதற்குப்பிறகு இந்த துர் எண்ணம் பிறக்காதல்லவா?" என்று சொல்லி ஆவேசம் வந்தவனைப்போலத் திரும்பினான் மூட்டையை எடுக்க.

அவன் வைத்திருந்த சாக்கு மூட்டையை அங்கே காணோம்! சாக்கு மூட்டையோடு பணமூட்டையும் மறைந்து விட்டது! "ஐயோ! திருடன்! திருடன்" என்று கூக்குரலிட்டான் ஷண்முகம். வண்டியிலிருந்த எல்லோரும் 'திருடன் திருடன்' என்று ஏககாலத்தில் கூச்சல் போட்டார்கள். "என்னத்தை ஐயா காணோம்?" என்றார் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தவர். ஷண்முகம் ஒரு கணம் மலைத்து நின்றான். அவன் முகத்தில் உடனே புன்னகை அரும்பிற்று.

"ஒன்றுமில்லை! ஒரு சாக்கைக் காணோம்" என்று ஷண்முகம் பதில் சொன்னான். அதற்குத்தானா இவ்வளவு சத்தம் போட்டாய்?" என்று அவர் எறிந்து விழுந்தார்.

ஷண்முகம் ஊர் வந்து சேர்ந்ததும் முத்து அவனை என்னென்னவோ கேட்டான். "திடும் என்று ஏன் பட்டணம் போனாய்?" "ஏன் என்னிடம் சொல்லாமல் போனாய்?" என்று. ஆனால் ஷண்முகம் நடந்த விஷயங்களைச் சொல்லவேயில்லை.

மறுநாள் மாலை குளத்தருகில் நின்று இந்த விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தானல்லவா? பணம் பறிபோனதால் அவன் மனதில் சொல்ல முடியாத ஓர் ஆனந்தம் ஏற்பட்டது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. கடைசியில், ஹிருதயத்தைப் பறிகொடுத்து விடவில்லை என்ற உணர்ச்சி அவனுக்குப் புளகாங்கிதத்தைக் கொடுத்தது. அந்த ஆனந்தத்தில் மூழ்கியவனாக ஷண்முகநாதன் நின்றான். அப்போது மரத்திலிருந்து ஒரு இலை தண்ணீரில் விழுந்ததால் சிறு அலைகள் எழும்பி மறைந்தன. அந்த அலைகளுக்கும், அவன் மனதை அலைத்த நேற்றைய சம்பவங்களுக்கும் எவ்வளவு பொருத்தம்? வாழ்க்கைக் கடலில் இன்னும் எவ்வளவோ அலைகளும், ஏன் புயல்களும் தோன்றப் போகின்றன என்று எண்ணியவனாய் அவன் செந்நிற வானைப் பார்த்தான்.

டாக்டர் நேத்ரா

(ஸ்ரீமதி கமலா பத்மநாபன்)

ஜீய புரத்திற் கருகாமையிலுள்ள அம்மன்குடி என்ற கிராமத்தில் ஒரு வீட்டின் பின் புறத்தில், இரண்டு வயதுக் குழந்தை செல்லம், கையில் ஒரு ரவை உருண்டையை ஏந்திக்கொண்டு, தலையை ஒரு பக்கமாகச் சாய்த்த வண்ணம், தோட்டத்திற்கு வெளியே, தடுமாறிக்கொண்டு நடந்து வந்து ஒரு குறுகிய பாதையில் நின்றது. அச்சமயம், அதே பாதையில் சுமார் நூறு கஜத்திற்கப்பாலிருந்து, ஒரு காளை மாடு, எதையோ கண்டு மிரண்டு, நாலு கால் பாய்ச்சலில், தன் கூர்மையான கொம்புகளை மேலுங் கீழும் ஆட்டிய வண்ணம், குழந்தையை எதிர்ப்பது போல், ஓடி வந்தது.

இன்னும் சில வினடிகளில் குழந்தை செல்லத்தை அக்கொடுங்காளை குத்திக் குதறிவிட்டிருக்கலாம். ஆனால் தெய்வ சங்கற்பம் வேறு விதமாக இருந்தது. அக்குறுகிய பாதையின் ஓரத்தில் தன் இடுப்பில் ஒரு மூங்கில் கூடையை வைத்துக்கொண்டு சத்தை சருகுகள் மூங்கில் பொறுக்கிக் கொண்டிருந்த ஏழு வயது சிறுமி கண்ணி, கூடையை தொப்பென்று போட்டுவிட்டு, குழந்தையின் சமீபம் ஓடோடி வந்து, அதை வாரி அணைத்துக் கொண்டு, அருகிலிருந்த ஒரு பள்ளத்தில் குதித்தாள். இவையெல்லாம் இரண்டு மூன்று விநாடிகளில் நடந்தேறின. குழந்தையைத் தாக்க வந்த காளையும் ஏமாற்ற மடைந்ததுபோல், தான் வந்த வழியே வாலைத் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. இந்த அமர்க்களத்தில் செல்லத்தின் கையிலிருந்த தின்பண்டம் கீழே தவறி விழுந்து, மண்ணில் கலந்தது.

உடனே குழந்தை "அம்மா, அப்பிச்சி போச்சு!" என்று மழலைச் சொற்களில் சொல்லிக்கொண்டே அழ ஆரம்பித்தது. இதற்குள் கண்ணி தன் மார்பில் அணைத்துக்கொண்டிருந்த குழந்தையை சமாதானம் செய்த வண்ணம் பள்ளத்திலிருந்து சிரமப்பட்டு, வெளி வந்தாள்.

ஐயோ! இந்த சந்தர்ப்பத்திலா "செல்லா அடி செல்லா, எங்கேயடி போய் விட்டாய்! என் கண்ணே!" என்று அன்பு ததும்ப கூவிக்கொண்டு ராஜம் மாள் வீட்டு உட்புறமிருந்து புறக்கடைக்கு வரவேண்டும்!

கேவலம் ஈன ஜாதியைச் சேர்ந்த கருப்பன் மகன் கண்ணி தன் அருந்தவப் புதல்வியைத் தூக்கி அணைத்துக்கொண்டு நின்ற காட்சியைக் கண்டதும் ராஜம் மாளுக்கு அடங்காக் கோபம் பொங்கிற்று. "அடி, தடிச் சிறுக்கி, உனக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் எங்கிருந்து வந்ததடீ? பிராம்மணக் குழந்தையை, கொஞ்சமும் தங்கு தடங்கலின்றி தூக்கி வைத்துக்கொள்ள உனக்கு எவ்வளவு திமிறு இருக்க வேண்டும்! இறக்கடி கீழே குழந்தையை! உன் அப்பனிடம் சொல்லி முதுகுத் தோலை உரித்துப் போடச் சொல்லுகிறேன் பார்." என்று இன்னும் சரமாரியாகக் கண்ணியை நிந்தித்தாள்.

கண்ணி நடுங்கிப்போய்க் குழந்தையைக் கீழே இறக்கிவிட்டுப் பயத்துடன், "இல்லிங்க அம்மா, ஒரு மாடு"—என்று இன்னும் மேலே கூறுவதற்குள் ராஜம் மாள் பல்லை நற நறவென்று கடித்து கண்ணியை ஒரு முறை விழித்துப் பார்த்து "போருமடி, வாயை மூடிக்கொண்டு எட்டிப்போ" என்று அதட்டி விட்டுக் கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீரை இழுத்து, குழந்தையின் மேல் ஊற்றி ஸ்நானம் செய்வித்த பிறகு, ஈர உடம்பைத் தன் புடவைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டே," என் குஞ்சே! தங்கக் கட்டியே, உன்னை அந்தப் பறப்பிசாசு தொட்டு விட்டதா? அவள் கைகளை முறித்துப் போடலாமா?" என்று கேட்

டுக் கொண்டே செல்லத்தை முத்த மிட்டாள்.

தாயைக் கண்டதும் குழந்தை "அம்மா, அப்பிச்சி போச்சு" என்ற பல்லவியைப் பாட ஆரம்பித்து, தூரத்தில் அஞ்சி நின்றுகொண்டிருந்த கண்ணியைத் தன் சிறிய விரலால் சுட்டிக் காட்டிற்று.

"ஏண்டி கள்ளி! குழந்தை கையிலிருந்த பக்ஷணத்தைப் பிடுங்கித் தின்றுவிட்டு, பிறகு அது அழாமல் இருப்பதற்காகத்தானே, அதைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்தாய்? பச்சைக் குழந்தை கூடச் சொல்கிறதே!" என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள்.

"இல்லீங்க தாயி. என்னப்பன் மேலாணை, நானு சத்தியமா கொளந்தெ கை பச்சனத்தெ தொடலீங்க, காளைமாடு ஒண்ணு—" என்று தொடர்ந்து இன்னும் பேசுவதற்குள் இம்முறையும் ராஜம்மாள் அவளைத் தடுத்து கடுஞ் சினத்துடன் "சீ மூதேவி! பதில் பேசினால் பல்லை உதிர்த்துவிடுவேன்! என்னிடமா க்தை அளக்கிறாய்?" என்று சொல்லிக் கொண்டே கீழே கிடந்த ஒரு ஜல்லிக் கல்லை எடுத்து கண்ணியை நோக்கி விசையாக விட்டெறிந்தாள்.

அந்தோ, அநியாயம்! அக்கல் கண்ணியின் நெற்றியில் பலமாகத் தாக்கி, காயம் பட்டு உடனே ரத்தம் வழிந்தோட ஆரம்பித்தது. ராஜம்மாள் இதைச் சிறிதும் கவனியாமல், குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றாள். கண்ணி காயம்பட்ட இடத்தை ஒரு கையினால் அமுக்கிப் பொத்திக் கொண்டு, வலி தாங்க முடியாமல், அலறிய வண்ணம், வயலில் வேலை செய்துகொண்டிருந்த தன் தந்தை கருப்பனிடம் சென்று நடந்த வரலாற்றைத் தெரிவித்தாள்.

அச்சமயம் வயலில் மேற் பார்வை செய்து கொண்டிருந்த ராமய்யர் (ராஜம்மாளின் கணவன்) கண்ணியின் அலறலையும் அவள் நெற்றியிலிருந்து வழிந்தோடும் ரத்தத்தையும் காணச் சகியாதவராய், தன் மனைவியைச் சபித்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றார்.

கருப்பன் தன் கைவேலையைப் போட்டுவிட்டு, பதறிக் கொண்டு, தன் மகளைத் தழுவித் தூக்கிச் சென்று தன் குடிசையை அடைந்தான். காயத்தை அலம்பி, அதில் கொஞ்சம் கரிப்பொடியை அடைத்து விட்டு ஒரு சிறு குழந்தையைப் போல் தானும் அழத்தொடங்கினான்.

ஏழு வருஷங்களுக்கு முன்பு, கண்ணியைப் பெற்றுப் போட்டு விட்டு இறந்த கருப்பாயி, சாகுந் தறுவாயில், "கொளந்தெயெ சாக்கரதையாப் பாத்துக்கோ!' என்று சொல்லி விட்டு உயிர் நீத்தது இப்பொழுது கருப்பனுக்கு ஞாபகம் வரவும், அவன் மனது அத்யந்த வேதனை அடைந்தது. இதே காரணத்தினால் தான் அவன், காயத்தின் வலி பொறுக்க முடியாமல் அழும் கண்ணியைச் சமாதானம் செய்வதை விட்டுத் தானும் அவளுடன் சேர்ந்து தன் மனோவலி பொறுக்க முடியாமல் அழுது தீர்த்தான்.

மேற் சொன்ன சம்பவங்கள் நிகழ்ந்த இரண்டு மாதங்களுக் கெல்லாம், கருப்பன் ஒரு நாளிரவு திடீரென்று மார் வலியினால் இறந்தான். அவன் இறக்கும் தறுவாயில், அவன் ஜாதி ஜனங்கள் யாரும் அருகில் இல்லை. மறுதினம் காலையில் தான் அவர்களுக்கு கருப்பன் மரித்த விஷயம் தெரியும். அன்றிரவே இன்னொரு அதிசய சம்பவமும் நடந்தது. அதாவது கருப்பன் மகள் கண்ணியும் அதே சமயத்தில் காணாமல் போய் விட்டாள்.

பறைச்சேரியில் ஒரே குழப்பம். எல்லோர் வாயிலும் கருப்பன் இறந்து போனதைப் பற்றியும் அவன் மகள் காணாமல் போனதைப் பற்றியுமே பேச்சாக இருந்தது. பலர் பலவிதமாகப் பேசித் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர்.

"தம்பி! இதென்னடா! கண்ணி எங்கேடா மாயமா போயிட்டா? நல்ல பொண்ணுடா! குளம் குட்டையிலெ விளுந்திருக்குமோ?" என்றான் ஒருவன்.

"அண்ணே! நெசமா? அது பெரிசானதும் நானே அதைக் கண்ணாலம்

கட்டிக்கணும்னு நெனச்சிக் கிட்டிருந்தேனே! ஐயோ, இப்படி மோசம் பண்ணிட்டுப் பூட்டாளே! எப்படி அண்ணே அதைத் தேடிப் பிடிப்பது?" என்றான் மற்றொருவன்.

இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு கிழவன் போங்கடா வேலையத்த பயல்களா! கண்ணி உங்களுக்கு ஒரு நாளும் ஆப்படமாட்டள் தெரியுமா? மூணுமாசத்துக்கு முன்னே நம்ம கொலத்து காளியம்மா நரபலி கொடுக்கணும்னு கேட்டதை மறந்து பூட்டிங்களாடா? கருப்பன் பூட்டதும் கண்ணியை கவனிச்சுக்க யாருமில்லையேன்னு காளியம்மாதான் அவளை முளுங்கி ஏப்பம் விட்டிருப்பாள்! தெரியுமா? சும்மா கூடிக் கூடி பேசிப் பொழுது போக்கி றீங்களே! எழுந்திருச்சுப் போய் ஒங்க வேலெ வெட்டியைப் பாருங்கடா" என்று தோரணையுடன் கூறி விட்டு அப்பால் சென்றான்.

கால சக்கரம் வேகமாகச் சுழன்றது. கருப்பன் இறந்து போய் இருபது வருஷங்கள் ஆயின. கண்ணி மறைந்து போனதும் மாயமாகவே இருந்தது. ராஜம்மாள் விதவையாகி ஐந்து வருஷங்கள் ஆயின. பிராம்மண ஜாதியின் சம்பிரதாயத்திற்குக் கேற்ப ராஜம்மாள் விதவா வேஷம் பூண்டாள். செல்லத்திற்கு விவாகமாகி அவள் தன் கணவனுடன், தற்சமயம் தன் தாயின் இல்லத்திலேயே வசித்து வந்தாள். அவள் கணவனும் தன் மாமனாருடைய நில புலன்களைக் கவனித்துக் கொண்டு தன் வேட்டகத்திலேயே இருந்து வந்தான். ஆனல் இப்பொழுது அம்மன் குடி வீட்டைக் காலி செய்து விட்டு ஜீயபுரத்தில் புது வீடு கட்டிக்கொண்டு எல்லோரும் அதில் வாசம் செய்து வந்தனர்.

செல்லம் விவாகம் ஆகி வெகு நாட்கள் கழித்து, இப்பொழுது, அவளுடைய இருபத்திரண்டாம் வயதில் கர்ப்பமாக இருந்தாள். பூர்ண கர்ப்பிணி. நான்கு தினங்களாகப் பிரசவவேதனை ஆரம்பித்து அன்ன ஆகாரமில்லாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள். ஐந்தாவது நாள் வலியின் உபத்திரவம் தாங்க முடியாமல் செல்லம் அடிக்கடி களைப்பு மேலிட்டு மூர்ச்சித்துப் போனாள். ராஜம்மாள் தன் செல்வப் புதல்வி படும் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விட்டு எண்ணிறந்த தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து மஞ்சள் துணிகளில் பணமும் பவுனுமாக முடிந்து வைத்தாள்.

செல்லத்திற்காக ஏற்படுத்தப் பட்டிருந்த அவ்வூர் மருத்துவச்சி நான்கைந்து நாட்களாகக் கர்ப்பிணியுடன் தூக்கம் விழித்துங்கூட, பிரசவமாகும் அறிகுறிகளைக் காணுது மனச்சோர்வும் அதைரியமும் அடைந்து ராஜம்மாளைப் பார்த்து, "அம்மா,எனக்கு ரொம்பவும் நம்பிக்கைக் குறைவாக இருக்கிறது. சிக்கலான கேஸாக இருக்கிறபடியால் நீங்கள் ஒரு நல்ல லேடி டாக்டரை அழைத்து வருவதே உத்தமம் என்று தோன்றுகிறது. திருச்சிராப்பள்ளியில் டாக்டர் நேத்ரா என்ற ஒரு வங்காளமாது இருக்கிறாள். அவள் நல்ல கைராசி உள்ளவளென்றும், கெட்டிக்காரி என்றும் எல்லோரும் சொல்லுகிறார்கள். நீங்கள் உடனே அந்த அம்மாளை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லி விட்டாள்.

ராஜம்மாள் மிகவும் கலவரமடைந்து பக்கத்திலிருந்த ஒரு மிராசுதார் வீட்டிலிருந்த மோட்டாரை இரவல் வாங்கி, அதில் தன் மாப்பிள்ளையை அனுப்பி உடனே திருச்சிராப்பள்ளி சென்று டாக்டர் நேத்ராவை அழைத்து வரும்படி சொன்னாள்.

சில மணி நேரங்களில் டாக்டர் நேத்ரா காரில் வந்து இறங்கியதும் ராஜம்மாள் அவளை வரவேற்று, செல்லம் புழுவாய்த் துடித்துக்கொண்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

டாக்டர் நேத்ரா விரைவில் செல்லத்தின் நிலைமையைப் பரீக்ஷித்தறிந்து கொண்டு "அம்மா, உங்கள் மகளுக்குத் தானகப் பிரசவமாவது முடியாத காரியம்! ஆனபடியால், குழந்தையை ஆயுதம் போட்டு எடுப்பதில் உங்களுக்கு ஒருவித ஆக்ஷேபனையும் இல்லையே?" என்று ராஜம்மாளை வினவிய வண்ணம், அதற்

குத் தேவையான ஆயுதங்களைச் சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

"நீங்கள் எப்படியாவது என் பெண்ணுக்கு உயிர்ப் பிச்சை அளித்தால் போதும். எனக்கு வேண்டியது அவ்வளவு தான்" என்று கூறி ராஜம்மாள் அழத்தொடங்கினாள்.

டாக்டர் நேத்ரா ராஜம்மாளுக்குத்தேறுதல் வார்த்தைகள் சொல்லி, வெளியில் அனுப்பிவிட்டு மருத்துவச்சியை உதவிக்கு வைத்துக்கொண்டு, செல்லத்திற்கு மயக்கம் கொடுத்து, சிறிது நேரத்தில் தங்க விக்ரஹம் போன்ற ஒரு ஆண் குழந்தையை, ஆயுதங்களினால் வெளியிலெடுத்தாள். இளங் குழந்தையின் "குவாக் குவா" சப்தத்தைக் கேட்டதும் ராஜம்மாளின் மனோ நிலைமையை வாசகர்களே யூகிக்க வேண்டுமே தவிர என்னால் விவரிப்பது இயலாத காரியம்.

பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் செல்லம் மயக்கம் தெளிந்து களைப்படைந்த புன்சிரிப்புடன் தன்னருகில் கிடத்தியிருந்த தன் குழந்தையைப் பார்த்துச் சந்தோஷித்தாள்.

ராஜம்மாள் டாக்டர் நேத்ராவை வாய் ஓயாமல் புகழ்ந்து கொண்டாடினாள். "டாக்டரம்மா, உங்களை எங்கள் குல தெய்வத்திற்குச் சமானமாக ஒப்பிட்டாலும் போதாது. பத்து தினங்கள் கழியும் மட்டும் நீங்கள் தினமும் வந்து என் மகளை வந்து பார்த்துவிட்டுப் போக வேண்டும்" என்று சொல்லிவிட்டு ஒரு வெள்ளித் தட்டில் பழம் பாக்கு வெற்றிலையுடன் ஐம்பது ரூபாய் பணமும் வைத்து நேத்ராவுக்கு அளித்தாள்.

நேத்ரா மிகுந்த அடக்கத்துடன் "அம்மா, நீங்கள் இவ்வளவு ஆடம்பரமாக எனக்குச் சன்மானம் செய்ய நான் என்ன பிரமாத கைங்கர்யம் செய்துவிட்டேன்? என் கடமையைத் தவிர நான் வேறொன்றும் செய்யவில்லையே" என்றுரைத்துக்கொண்டே ராஜம்மாளை ஏறிட்டுப் பார்த்தாள்.

ராஜம்மாளும் அப்பொழுதுதான் நேத்ராவை முதல் தடவையாக நன்றாக கவனிக்க நேரிட்டது. "டாக்டரம்மா, உங்களை நான் இதற்கு முன்பு எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே! அதென்ன உங்கள் வலது புருவத்திற்கு மேல் அவ்வளவு பெரிய வடு? உங்கள் விசாலமான நெற்றிக்கும் களை சொட்டும் முகத்திற்கும் திருஷ்டி பரிஹாரமாக அந்தத் தழும்பு வந்து முளைத்ததா? ஏதாவது கட்டி புறப்பட்டு ஆபரேஷன் செய்யப்பட்ட காயத்தின் தழும்பா அது?" என்று கேட்டாள் ராஜம்மாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட டாக்டர் நேத்ராவின் வதனம் சட்டென்று மாறியது. நீண்டதொரு பெருமூச்சு விட்டு, "அம்மா, நான் ஜாதியில் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவள். இந்தத் தழும்பு, நான் பல வருஷங்களுக்கு முன்பு ஒரு பால் மணம் மாறாக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியதற்காக ஏற்பட்ட பலன்" என்று சொல்லி டாக்டர் நேத்ரா (கருப்பன் மகள் கண்ணி!) பழய காலத்தில், தான் அம்மன்குடியில் செல்லத்தைத் தூக்கியதற்காக ராஜம்மாளால் கல்லடி பட்டுக் காயமடைந்த வரலாற்றைக் கூறினாள்.

"ஐயோ, கண்ணி, உன்மேல் கல்லை விட்டெறிந்து காயப்படுத்திய மாக பாவி நான் தான்! நீ அப்பொழுதும் என் குழந்தையின் உயிரைக் காப்பாற்றினாய்; இன்றைக்கும் என் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை அளித்தாய்! தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்ற மூட நம்பிக்கையினால் நான் அப்பொழுது உன்னை நிந்தித்து ஹிம்சித்தேன். ஆனால் இன்றைக்கு நான் உன்னைப் பூஜை செய்யவும் தயாராக இருக்கிறேன். உனக்கு எவ்விதமான பிரதி உபகாரம் செய்வதென்று எனக்குத் தோன்றவில்லையே" என்று அத்யந்த உணர்ச்சியுடன் நேத்ராவைக் கட்டிக் கொண்டாள். பிறகு ஞானோதயம் பெற்றவள்போல். "கண்ணீ நான் இவ்வளவு நாட்களாக அறியாமை என்ற இருளினால் மூடப்பட்டிருந்தேன்! இன்று உன்னைக் கண்டது முதல் இருள் நீங்கிப் பகல் ஆயிற்று. இன்று முதல் தாழ்ந்த வகுப்பினர் என்று கூறப்படும்

ஹரிஜனங்கள் எல்லோரும் என் சகோதர சகோதரிகளே! இது சத்தியம்! என்று ஒருவித ஆவேசத்துடன் கூவினாள் ராஜம்மாள்.

நேத்ரா ஆச்சர்யத்துடன் தன் கண்களை அகல விழித்துத் தான் காண்பது கனவோ நினைவோ என்று திகைத்தாள்.

* * * *

பல வருடங்களுக்கு முன்பு, கருப்பன் மரணத்தறுவாயில் இருந்த இரவு, அகஸ்மாத்தாய், ஆறுமுகம் செட்டியார் என்ற ஒரு வெளியூர் வாசியும் தேசாபிமானியுமான ஒருவர், கருப்பன் குடிசைப் பக்கம் போக நேரிட்டது. அவர் ஒரு பெரிய தனவந்தரும் பிரம்மசாரியுமானபடியால் கால் நடையாக அனேக கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து கிராமவாசிகளுக்கும் குடியானவர்களுக்கும் நன்மை புரிந்து வந்தார்.

எமன் பிடியில் போராடிக் கொண்டிருந்த கருப்பனின் முனகலைக் கேட்ட செட்டியார் குடிசைக்குள் நுழைந்து கருப்பனைப் போய்ப் பார்க்க, அவன் தன் மகள் கண்ணியைச் சுட்டிக் காட்டி அவளைக் காப்பாற்றி வளர்க்கும்படி வேண்டிக் கொண்டு பிராணனை விட்டான். உடனே செட்டியார் நித்திரா தேவியின் ஆலிங்கனத்திலிருந்த சிறுமி கண்ணியைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு அருகிலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, ரயிலேறி மறுதினம் சென்னை வந்து சேர்ந்தார்.

கண்ணியை வளர்க்கும் பொறுப்பு செட்டியார்க்கு ஏற்பட்டபடியால், அவர் தன் சுற்றுப் பிரயாணத்திற்கு முற்றுப் புள்ளி போட்டு கண்ணிக்கு "நேத்ரா" என்ற வேறு நாமம் சூட்டி அவளைச் சரிவர வளர்த்து உன்னதஸ்திதிக்குக் கொண்டு வருவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆரம்பத்தில், கண்ணியும் தன் தகப்பனை நினைத்து ஏங்கினாலுங்கூட, நாளடைவில் செட்டியாரின் அன்பிலும் தன்பழைய நாட்களை அறவேமறந்து புத்திசாலியாகக் கல்வி பயின்று வந்தாள். தக்க வயது வந்ததும் செட்டியார் அவளை டெல்லிக்கு அழைத்துச் சென்று வைத்தியப் பரீக்ஷைக்குப் படிக்கச் செய்தார். அவள் உத்தர தேசத்து ஸ்திரீகளைப் போலவே நடந்து கொண்டபடியால் எல்லோரும் அவளை வங்காள ஜாதி ஸ்திரீ என்றே எண்ணியிருந்தனர். அவரது இருபத்தைந்தாம் வயதில் திருச்சினாப்பள்ளி ஆஸ்பத்திரியில் லேடி அஸிஸ்டெண்ட் ஸர்ஜனாக நியமிக்கப்பட்டு தன் தொழிலில் உற்சாகமும் ஊக்கமும் காட்டி ஆரம்பத்திலேயே நல்ல பெயர் எடுத்தாள். அவளுக்கு வேலை ஆகிய ஒரு வருஷத்திற்கெல்லாம் ஆறுமுகம் செட்டியார் தன் ஆஸ்தியனைத்தையும் கண்ணியின் (இப்போது நேத்ரா) பேரில் எழுதி வைத்து, நல்வழியில் செலவழிக்கும்படி கூறிவிட்டு உயிர் நீத்தார். டாக்டர் நேத்ரா திருச்சி ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்ததுமன்றி ஏழைகளுக்கும் தாழ்ந்த ஜாதியாருக்கும் தர்ம வைத்தியம் செய்து கொண்டு எல்லோராலும் மெச்சப்பட்டு வாழ்ந்து வந்தாள். இந்த சமயத்தில் தான் ராஜம்மாளும் நேத்ராவும் சந்திக்க நேரிட்டது.

ராஜம்மாளின் மனோபாவத்திலும் நடத்தையிலும் திடீரென்று மாறுதல் ஏற்பட்டு அவள் ஹரிஜன முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு உழைத்து வருவதைக் குறித்து கிராமத்து ஜனங்கள் அவளைப் பாராட்டிப் பேசினர். அம்மன்குடியில், ஆதியில், நேத்ரா பிறந்து வளர்ந்த குடிசையிருந்த இடத்தில் ஒரு ஹரிஜன பாடசாலை ஏற்படுத்தி அதை ராஜம்மாள் வெகு ஆர்வத்துடன் நடத்தி வந்தாள்.

மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஜி. பாலசுப்பிரமண்யம்)

அத்தியாயம். XI

தபாலே உடைத்துப்பார்த்து செட்டியார் தான் ஆர்டர் கொடுத்த எள்ளு மூட்டைகள் சம்பந்தமான ரயில்வே ரசீது பாங்க் மூலமாய் வந்திருக்கிறது என்று தெரிந்துகொண்டார்.

செட்டியார், தன் மகனேயும் ராமுடுவையும் பார்த்து "இதே ஆசாமியிடம் நான் கொட்டையூர் வியாபாரத்திற்காகப் பலதடவை எள்ளு மூட்டைகள் தருவித்திருக்கிறேன். அப்பொ தெல்லாம் ரயில்வே ரசீது என்பேருக்கே நேரில் வந்துவிடும். இப்போது நான் கம்பெனி முறைமையில் ஆர்டர் கொடுத்திருப்பதால், என்னிடம் நம்பிக்கையில்லாமல் பாங்க்மூலம் அனுப்பிவிட்டார்கள் போலும்" என்றார்.

ராமுடு:—அப்படியல்ல, தங்களிடம் நம்பிக்கைக் குறைவு என்று எண்ணலாகாது. இதுதான் நவீன நாகரீக வியாபார முறை என்று நான் அடிக்கடி பாங்குக்குப் போய்வருவதனுல் தெரிகிறது. இவ்வூரில் பாங்க் வசதி இருப்பதனுல் அவர்கள் பாங்க்மூலம் அனுப்பியிருக்கிறார்கள். கொட்டையூரில் பாங்க் வசதி இல்லாமையால் தங்களிடம் ரயில்வே ரசீதை நேரில் அனுப்பிவந்தார்கள். தவிர தாங்கள் அவர்களுக்குத் தெரிந்தவர்களாகையால் அப்படி நேரில் அனுப்பினுர்கள். தாங்களல்லாமல் வேறு யாராவது சரக்குக்கு ஆர்டர் கொடுத்திருந்தால் அவர்கள் சமீபத்திலிருக்கும் ஓர் பாங்க்மூலம்தான் ரயில்வே ரசீதை அனுப்புவார்களாம். இவ்விஷயம் பாங்கில் சொன்னுர்கள். நாமும் கொழும்புவுக்கு பாங்க் மூலமாய்த்தானே ரசீது அனுப்பினேம். அதேமாதிரிதான் இதுவும்.

மாணிக்கம் செட்டியார்:—சரி, பாங்குக்கு இதற்காக எவ்வளவு தொகை செலுத்தவேண்டுமோ, அதற்கு ஓர் செக் எழுது, வட்டம் என்ன? 100க்கு இரண்டணு போட்டிருக்கிருர்களே. அது மிகவும் அதிகமாயிருக்கே, நான் முழு நோட்வாங்கி இரண்டு பாதியாக அனுப்புகிற வழக்கம். அதில் பத்தணுவோடு காரியம் முடிந்துவிடும். இப்போது நாம் ரூ. $2\frac{1}{2}$ கொடுக்கும்படியல்லவோ யிருக்கிறது. ராமுடு! நீ பாங்குக்குச் சென்று இந்த வட்டம் அதிகமாயிருக்கிறதென்று தெரிவித்து, அதில் ஏதாவது குறைக்கக் கூடுமாவென்று கேட்டுத் தெரிந்துவா. பிறகு செக் எழுதியனுப்பலாம். வட்டியும் அனுப்பிய தேதிமுதல் முக்கால் வட்டி போட்டிருக்கிறது. மூட்டை ஏற்றி மூன்று நாள்தான் ஆயிருக்கிறது. இங்குவந்து சேர இன்னும் நாலுநாள் ஆகும். பாஸை நாம் அதுவரையில் கையிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். மூட்டை வந்தபிறகு பாங்கியில் பணத்தைச்செலுத்தி ரயில்வே ரசீதைப் பெற்றுக்கொள்ளலாமென்ருல் நாம் வீணுக அதிக நாளைக்கு வட்டி கொடுக்கும்படி நேருகிறது. எல்லாவற்றிற்கும் பாங்கியில் போய் விவரமாய்த் தெரிந்துகொண்டுவா. இப்போது $1\frac{1}{2}$ மணியாய்விட்டது. நீ சாப்பிட்டபிறகு பாங்குக்கு நேரேபோய் விஷயங்களைத் தெரிந்துகொண்டு பிறகு வந்துவிடலாம்." என்று சொன்னுர்.

ராமுடுவும், நேராக வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போய்விட்டான். அவன் மாமனுரும் அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார். அங்கு போனதும் தன் கையிலிருந்த கைச்சாத்துப் புஸ்தகத்தை அவரிடம் கொடுத்தான். அவர் தன் பெண் கங்கம்மாளைக் கூப்பிட்டு அவளிடம் அதைக் கொடுத்துப் பெட்டியில் வைக்கும்படி சொல்லிவிட்டு

ராமுடுவை உள்ளே அழைத்துக்கொண்டு சாப்பிடப்போனார். சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் ராமுடு காலையில் பாங்கிலிருந்து எள்ளு மூட்டை சம்பந்தமாய் கம்பெனிக்குக் கிடைத்திருக்கும் கடிதத்தைப்பற்றியும், அதிக வட்டம் போட்டிருப்பதைப் பற்றியும் தெரிவித்தான்.

போஜனம் ஆனபிறகு இராமலிங்கய்யர் கோர்ட்டுக்குப்போகத் தயார் செய்துகொண்டு ராமுடுவை பாங்கில் விட்டுவிட்டுப் போவதாகச் சொல்ல, அவனும் அவருடன் சேர்ந்து சென்றான். இராமலிங்க அய்யர் பாங்கில் ராமுடுவை மாத்திரம் இறக்கிவிட்டுப் போகாமல் பாங்க் மானேஜரிடப் ராமுடுவைத் தானே நேரில் அழைத்துக்கொண்டு எள்ளு மூட்டை சம்பந்தமாய் அதிக வட்டம் போட்டிருக்கிற விஷயத்தைப் பற்றிச் சொல்லி அதைக் குறைப்பதற்கு ஏதாவது வழியிருந்தால் குறைக்கும்படி சொல்லிவிட்டு, ராமுடுவை மானேஜரிடம் விவரமாய்ப் பேசும்படி சொல்லிவிட்டுத் தான் கோர்ட்டுக்குச் சென்றுவிட்டார்.

1914-39

ஹிட்லரும்-
மஹா யுத்தமும்

ஏ. ஜி. வெங்கடாச்சாரியார்
எழுதியது.

400-பக்கங்கள் விலை. ரூ. 1-4-0

அநேக படங்களுடன்

கனம் டாக்டர். சுப்பராயன்
ஸ்ரீ எம். ரத்னசுவாமி இவர்கள்
முன்னுரையுடன் கூடியது.

பிருந்தாவன பிரசுராலயம்
மயிலாப்பூர்.

பாரதமணி காரியாலயத்திலும்,
ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

ஈரோடு டி. மு. கோர்ட்டு

S. C. 614/39

அப்பாய் ரவுத்து—வாதி

P. W. D. Channel Superintendent K. N. சேஷாத்திரி அய்யங்கார். } பிரதிவாதி

ஷை நம்பரில் வாதி பிரதிவாதி பேரில் பிராமிசரி நோட்டுப்படி ரூ. 67-10-3க்கு தாவா செய்து அதை 14-11-39ல் விசாரணை வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் பிரதிவாதிக்கு ஆக்ஷேபனைகளை ஷை கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளாவிட்டால் ஒரு கக்ஷி செய்து தீர்ப்பு செய்யப்படும்.

ஈரோடு, 24-10-39. } O. M. ரங்கசாமி கவுண்டர்
வாதி வக்கீல்.

புத்தக விமர்சனம்

உலக மஹாயுத்தம். ரா. கிருஷ்ணஸாமி (சங்கநாதம் ஆசிரியர்) எழுதிய தேவி பிரசுரம், 1. வெளியீடு—தேவி பிரசுராலயம் 29, மௌண்ட் ரோட் சென்னை. 32 பக்கங்கள் விலை அணு 1.

ராணுவபல வெறிகொண்டு உலக யுத்தத்தை உண்டாக்கின ஹிட்லரின் யுத்தத்தைக் குறித்து, ஆசிரியர் ரா. கிருஷ்ணஸாமி எளிய நடையில் எல்லோருக்கும் அர்த்தமாகும்படி எழுதியிருப்பது போற்றத்தக்கது. 1914ம் ஆண்டு மஹா யுத்தம், வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை, உடன்படிக்கைக்குப் பின் உண்டான ஐரோப்பிய தேச சரித்திரங்கள், ஹிட்லரின் ஆதிக்கம், இவைகளின் சரித்திரக் குறிப்புகளும், ஹிட்லரின் அக்ரம ஆக்ரமிப்புகள், போலந்தின் வீழ்ச்சி, மஹா யுத்தம் ஆரம்பம், தற்கால யுத்த நிலைமை இவைகள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வளவு எழுதிவிட்டு, ஆசிரியர் இந்தியாவுக்கும் இந்த யுத்தத்திற்கும் உள்ள சம்பந்தத்தை எழுதாது விட்டது ஒரு பெருங் குறையே.

ஐரோப்பிய தேசப்படம், மாகினுட் அரண், ஐரோப்பிய தேச அரசர்கள், சர்வாதிகாரிகள், மந்திரிகள் இவர்களின் 26 படங்கள், இவைகளுடன் அழகாக இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால் நமது மன்னர், ஹிட்லர், முஸோலினி இம்மூவரின் படங்கள் மாத்திரம் சேர்க்கப்படவில்லை. சிறு குழந்தைகளுக்குக்கூட இவர்களின்முகம் நன்கு தெரியும் என்ற நம்பிக்கை போலும். அச்சுப்பிழைகள் சில ஆசிரியரையும் அறியாமல் புகுந்திருக்கின்றன. வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தைப் பற்றி எழுதும்போது, நேச தேசமான ரஷ்யாவை, தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி ஆஸ்திரியாவுடன் சேர்த்ததால், ரஷ்யாவைப்பற்றிச் சந்தேஹம் உண்டாகிறது. இப்பிழைகளை அடுத்த பதிப்பில் நீக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஒரு அணு என்ற குறைந்த விலையில் வெளியிடப்பட்டிருக்கும் இப்புத்தகத்தை வாங்கிப் படித்து தேவி பிரசுராலயத்தாரின் நோக்கத்தைத் தமிழ் மக்கள் ஆதரிப்பது அவசியம்.

ஏ. என். கல்யாணசுந்தரம்.

சினிமாச் சுருள்

சாந்த சக்குபாய்

மதுரை ராயல் டாக்கி கம்பெனியார்களால் தயாரிக்கப்பட்ட சாந்த சக்குபாய் தமிழ்ப்படத்தின் பிரத்தியேகக் காட்சி சென்ற 21-ந்தேதி கெயிட்டி தியேடரில் நடைபெற்றது.

சாந்த சக்குபாய் ஓர் பக்தையின் சரிதை. அதில் ரஸமான சம்பவங்களைப் புகுத்துவதற்கு இடம் கிடையாது. ஏனெனில், இது யாவருக்கும் தெரிந்த சுவையற்ற, மாமியார்—நாட்டுப்பெண் கதையாகும். இருந்தாலும், டைரக்டர் நமக்கு சலிப்பு ஏற்படாதவகையில், பக்தியே உருவெடுத்த இந்தக் கதையைத் தற்காலத்திற்கேற்றவாறு கூடுமான வரையில் நன்கு எடுத்திருக்கிறார்.

படத்தில் நம் உள்ளத்தைக் கவருபவை சாரங்கபாணியின் நடிப்பும், அசுவத்தம்மாவின் பாடல்களும்தான். சாரங்கபாணி, தன் தாயாரைக் கண்டிக்க எண்ணங்கொண்டு, அதைக் கண்ணாடி எதிரில் ஒத்திகை செய்து பார்க்கும்பொழுதும்,

கையில் குடுபோட்டவுடன் கதறும் பொழுதும், அவர் தம்மையே மறந்து நடித்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். அசுவத்தம்மா பாடும் பாடல்களில் முக்கியமாக "வைகுந்தா ஹரி"யும் ராகமாலிகையில் பாடும் விருத்தமும், மிகவும் நன்றாயிருக்கின்றன. நடிப்பும் தேவலே. தமிழ் பேசுவதும் தேவலே! ஆனால் இவருக்கு சில பாடல்கள் அனாவசியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக நன்கு நடித்திருப்பவர் கொத்தமங்கலம் சீனு. சக்குபாயின் மாமியாராக நடித்திருக்கும் பன்னிபாய் பாடியுள்ள இரண்டு பாட்டுகளும், பாட வேண்டும் என்ற அவசியத்திற்காகப் பாடியிருப்பதாகத் தோன்றுகிறது. கொத்தமங்கலம் சுப்பு தேவலே. மற்றவர்களைப் பற்றி எழுத என்ன இருக்கிறது?

தியேட்டரைவிட்டு வெளிவரும் பொழுது, ஒரு பிரகிருதி "சிறந்த பக்தையின் சரிதையில், இவ்வளவு கீழ்த்தரமான ஹாஸ்யத்தைப் புகுத்தியது மிகவும் விசனிக்கத்தக்கதாகும். இந்த ஹாஸ்ய பாகம் இல்லாமல் இருந்திருந்தால் படம் இன்னும் நன்கு சோபித்திருக்கும்! விபசாரியாகப் போக பத்தனம் செய்தவள் பாசற்ற பாண்டுரங்கனின் பெயரைச் சொல்லியா தப்பித்துக் கொள்ளவேண்டும்? அட பாண்டுரங்கா!" என்று சொன்னது என் காதில் விழுந்தது! இனி ஹாஸ்யத்தைப்பற்றி எழுத என்ன இருக்கிறது?

இந்த ஹாஸ்யத்தினால் டைரக்டர் இது ஓர் பக்தையின் சரிதை என்பதைச் சில இடங்களில் மறந்துவிட்டார் என்று தோன்றுகிறது! மற்றபடி டைரக்ஷன் தேவலே. ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் நன்றாயிருக்கின்றன. இப்படம் சுமார் மூன்றுமணி நேரந்தான் ஓடுகிறது!

சூரிய புத்திரியும் சுயராஜ்யமும்

மங்களம் நிறைந்த விஜயதசமியில் எல்லோரும் சுபகாரியங்களை ஆரம்பிப்பது வழக்கம். அவ்வழக்கத்தை விட்டுக் கொடுக்காமல் பாஸ்கரா பிக்சர்ஸாரும், மோஷன் பிக்சர் ப்ரொடியூஸாரும் சேர்ந்து சூரிய புத்திரியைச் சலனப்பட ரூபமாகக் கொண்டுவரக் கொடியேற்று விழாவைச் செய்தனர். அவ்விழாவில் பலர் கலந்து கொண்டனர். அங்கே செவிக்கினிய விருந்தும் நாவுக்கினிய சிற்றுண்டி விருந்தும் குதூகலத்திடையே குறைவுறாமல் நடந்தது. இதன் மத்தியில், "சைலன்ஸ், டப்" என்று சப்தம் கேட்டதும் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அடுத்த நிமிஷம் இந்திய கொயபெல்ஸ் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஐயர் தனித்தொண்டையில் கணீரெனப் பேச ஆரம்பித்தார். தேச நிலைமையைப் பற்றியும், சினிமாத் தொழிலின் கஷ்ட நிஷ்டூரத்தைப் பற்றியும், தமிழ் நாட்டில் படக்கலையில் மோஷன் பிக்சர்ஸார் செய்திருக்கும் அருந் தொண்டினைப் பற்றியும் கூறி, "இப்படம் சீக்கிரம் முடிவுபெற்று சுதந்திர இந்தியாவில் காட்டப்பட வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்கிறேன்" என்று முடித்தார். ஆதலால் சூரிய குமாரிக்கும் சுதந்திரத்திற்கும் உள்ள ஒற்றுமை இப்பொழுது புலப்படுகிறதல்லவா? படம் சீக்கிரம் வந்து விடலாம். ஆனால் சுதந்திரம் இந்தியாவுக்கு வந்து விடுமா வென்பது சந்தேகந்தான்.